விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: பத்து

சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2036 | மார்கழி 03 ஞாயிற்றுக்கிழமை (18.12.2005) | தொலைபேசி 222 3378, 222 7644 | ஒலி 364

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
சீமெந்து

# ஆசிய நாட்டில் நேரடிப்பேச்சு விடுதலைப்புலிகள் நிராகரிப்பு

## நோர்வேயில் நடாத்தவேண்டுமெனத் தெரிவிப்பு



(நமது நிருபர்)

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான நேரடிப் பேச்சுக்களை ஐரோப்பிய நாடொன்றி லேயே நடாத்த வேண்டும். அதிலும் நோர்வேயில் நடாத்த வேண்டும் என்பதே புலிகளின் கடந்த கால நிலைப்பாடு. அந்நிலைப்பாட்டில் எந்தவித மாற்றமும் இல்லை.

ஆசிய நாடொன்றில்தான் பேச்சுக்கள் நடைபெற வேண்டும் என்றும் விடுதலைப் புலிகளை ஐரோப்பிய நாடுகள் தடைசெய்ய வேண்டும் என்றும் அரசாங்கம் கூறிவருவதாவது ஒரு சதி முயற்சியாகவே நாம் கருதுகின்றோம் என தமிழீழ அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார். விடுதலைப்புலிகளின் சமாதான செயலகத்தில் நேற்று நடைபெற்ற இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறு முகன் தொண்டமானின் சந்திப்பினையடுத்துக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்தார். (02 ஆம் பக்கம் பார்க்க)

## மடத்துவெளியில் யுவதியின் சடலம் மீட்பு

(புங்குடுதீவு)

புங்குடுதீவு மடத்து வெளியில் கிணறு ஒன்றில் இருந்து இளம்பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. மீட்கப்பட்டவர் இளையதம்பி தர்ஷினி (வயது-20) என அடையாளம் காணப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் தையற் பயிற்சி நிலையமொன்றிற்கு சென்ற பிரஸ்தாப யுவதி இரவு வரை வீடு திரும்பவில்லை.

இதனையடுத்து நேற்று அப்பகுதி மக்கள் அவரைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டனர். அதன் போது அவரது காலணி ஒன்று கண்டு பிடிக்கப்பட்டது. தொடர்ந்து அப் பகுதியில் தேடிய போது மடத்துவெளி முருகன் கோவிலுக்குப் பின்புறமாகவுள்ள அவரது வீட்டிற்கு (10 ஆம் பக்கம் பார்க்க)

## வங்கக் கடலில் தாழமுக்கம் இன்று கரையைக் கடக்கும்

திருகோணமலைக்கு நேராக 150-200 கிலோமீற்றர் தூரத்தில் காணப்படும் புயல் அபாயம் சூறாவளியாக பரிணமித்து வட மேற்குத் திசையாக நகர்ந்து இன்று காலை திருகோணமலைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான கரையைக்கடக்கும் எனவளி மண்டலிவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனால் நாட்டின் பல பகுதிகளிலும் கடும் காற்றுடன் கூடிய மழை பெய்யும் என வளிமண்டலவியல் திணைக்களத்தின் பிரதிப்பணிப்பாளர் எச்.எஸ்.காரியவாசம் தெரிவித்துள்ளார். தாழமுக்கம் காரணமாக திருகோணமலை முதல் மன்னார் பகுதி வரையிலான கடற்பகுதியில் கொந்தளிப்பு ஏற்படலாம். இந்தத் தாழமுக்கம் மேலும் விரிவடைந்தால் புயலாக மாறலாம் என திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ச-8)

## ஹெலி மீது நடாத்தப்பட்ட தாக்குதலுக்கு புலிகளேபொறுப்புக்கூற வேண்டும்

### கண்காணிப்புக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

அம்பாறைப் பகுதியில் கடந்த புதன் கிழமை இராணுவத்தின் உலங்கு வானூர்தி தாக்கப்பட்ட சம்பவம் யுத்தநிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறும் செயலாகும்.

இச் சம்பவத்துக்கு விடுதலைப்புலிகளே பொறுப்பேற்க வேண்டும் என யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழு நேற்று அறிவித்துள்ளது.

உலங்கு வானூர்தியைச் செலுத்தியவர்களையும் அதில் இருந்த முக்கிய அதிகாரிகளையும் விடுதலைப்புலிகளையும் இச் சம்பவம் தொடர்பாக சந்தித்து விசாரணைகள் நடைபெற்றன.

இக் குண்டுகள் புலிகள் கட்டுப்பாட்டு பகுதி ஒன்றில் இருந்து தான் வந்திருக்கின்றன. அதனை நோக்கும் போது அதற்கான முழுப் பொறுப்பையும் விடுதலைப்புலிகளே ஏற்க வேண்டும் என யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்றூப் ஹொக்லண்ட் தெரிவித்துள்ளார்.

2002 ஆம் ஆண்டில் தாங்கள் இங்கு வந்த பிறகுநடக்கும் முதல் சம்பவம் இது என்பதையும் சுட்டிக்காட்டியுள்ள கண்காணிப்புக் குழுத் தலைவர் இதே (10 ஆம் பக்கம் பார்க்க)

## வெட்டுப்புள்ளி டிச.27வெளியாகும்

(கொழும்பு)

2006 ம் ஆண்டு பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளி விபரங்கள் எதிர் வரும் 27 ஆம் திகதி வெளியிடப்படும் என பல்கலைக்கழக மானியங்களின் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

இவ் வெட்டுப்புள்ளி விபரங்கள் டிசம்பர் 20 ஆம் திகதி வெளியிடப்படுவதற்கு முதலில் தீர்மானிக்கப்பட்டிருந்தது என ஆணைக்குழுவின் சிரேஷ்ர செயலாளர் பிரியந்த பிரேமகுமார தெரிவித்துள்ளார்.

பரீட்சைப் பெறுபேறுகளுக்காக விண்ணப்பித்தவர்களின் விண்ணப்ங்கள் தவறான முகவரிக்குச் சென்றதன் காரணமாக மீள் பரிசீலி னைப்பணிகள் தாமதமாகியதாகவும் இத னாலேயே (10 ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவ் கொலை வழக்கு முருகன் உண்ணாவிரதம்

(கொழும்பு)

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைதாகி ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ள முருகன் இந்தியா வேலூர் சிறையில் கால வரையறையற்ற உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளார்.

இலங்கையில் உள்ள தனது மகளை இந்தியாவுக்கு அழைத்து வருவதற்கு விசா மறுக்கப்பட்டமையை கண்டித்தே முருகன் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளார். கடந்த 15 ஆம் திகதியில் இருந்து அவர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளார்.

இவருக்கும் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைதாகி ஆயுள் சிறைத் தண்டனை பெற்ற நளினிக்கும் சென்னை பூந்தமல்லி சிறையில் அரித்ரா என்ற பெண் குழந்தை பிறந்தது.

தற்போது இக் குழந்தை இலங்கையில் வசித்து வருகின்றதது. தற்போது 14 வயதை எட்டியுள்ள அரித்ரா தனது பெற்றோரைப் பார்க்க விரும்பினார்.

நீண்ட நாள் முயற்சித்தும் இதற்கான விசா அக் குழந்தைக்கு இது வரை அளிக்கப்படவில்லை. இந் நிலையில் வேலூர் மத்திய சிறையில் திடீர் உண்ணாவிரதத்ததை முருகன் கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்தார். தனதுமகளுக்குவிசாஅளிக்கப்படும்வரை உண்ணாவிரதத்தை தொடரப் போவதாக சிறை அதிகாரிகளிடம் அவர் தெவித்தார். (ச-4)



தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் சந்தித்துப்பேசினார். அச்சந்திபில் கலந்து கொண்டடோரை படத்தில் காணலாம்

உங்கள் காரியாலயத்தில், உங்கள் வீட்டில், நீங்கள் விரும்பிய இடத்தில்
★ உலக சுகாதார விதிமுறைகளுக்கமைவான தயாரிப்பு முறை
★ அதிநவீன தயாரிப்பு சாதனங்கள் மூலமான இரட்டிப்பு சுத்திகரிப்பு
★ இலங்கை தரநிர்ணய உத்தரவாதம் SLS
★ உங்கள் வாசல் வரையான இலவச சேவை
மேலதிக விபரங்களுக்கு
SWISS MINERAL
20 லீட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் 210/= மட்டுமே
Head Office
Gbn,posfach
8026 Zurich
Switzerland
Tel+412438259
Factory;
231, Temple Road,
Nallur, Jaffna.
Phone : 222 8122
0773126963

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஆசிய நாட்டில் நேரடிப் பேச்சு...

சுமார் ஒரு மணித்தியாலம்வரை இடம்பெற்ற இச் சந்திப்பில் விடுதலைப்புலிகளின் சார்பில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சோ.தங்கன், தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், சமாதானச் செயலகத்தைச் சேர்ந்த தமிழ்விழி, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரச அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் தியாகராஜா, அரசியல்துறையைச் சேர்ந்த நவீனன் ஆகியோரும் ஆறுமுகன் தொண்டமானுடன், முத்துசிவலிங்கம், ஆர். யோகராஜன், வி.இராதாகிருஸ்ணன், எம்.சச்சிதானந்தன், து.மதியுகராஜா, கே.கிருஸ்ணமூரத்தி, அ.கணேசிங், திருமதி.தேவி ஆகியோர் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

சந்திப்பு நிறைவுபெற்றதும் தமிழீழஅரசியல்துறைப் பொறுப்பாளர் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்தார். அதன் முழு விபரமும் வருமாறு:

***கேள்வி:- இன்றைய சந்திப்பு தொடர்பாக?***

பதில்:- இன்றை சந்திப்பானது மலையக தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் எங்களுடன் சந்திக்க கேட்டதற்கு இணங்க சந்திப்பு இடம்பெற்றது. நீண்ட நேரமாக கலந்துரையாடியுள்ளோம். பல பிரச்சினைகள் தொடர்பாக விவாதித்தோம். முக்கியமாக தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு இருக்கவேண்டும். ஒற்றுமையுடன் செயற்படவேண்டுமென்பதே அவர்களுடைய நிலைப்பாடாக இருந்தது.

நானும் சில விடயங்களை தெளிவாக எடுத்துக் கூறினேன். எங்களுடைய தலைவர் பல சந்திப்புக்களின் போது தமிழ்க்கட்சிகள், மலையககட்சிகள் ஆகிய சந்திப்புக்களின்போது இதனையே தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளார். அந்த வகையில் நீங்கள் இப்படியான ஒரு நிலைப்பாட்டை எடுப்பதை நாங்கள் வரவேற்கிறோம். எங்களுடைய பூரணமான ஆதரவை நிச்சியமாகத் தருவோம். அனைத்து தமிழ்க் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்படுவதும் தமிழ் மக்களுக்கு எந்தளந்த பிரதேசங்களில் அச்சுறுத்தல் வருகின்றதோ அல்லாவிட்டால் தமிழ் மக்களுக்காக குரல் எழுப்ப நேர்கின்றதோ அந்நேரத்தில் அனைத்து தமிழ்க் கட்சிகளும் இணைந்து செயற்படுகின்ற சூழல் உருவாகவேண்டும். அதனை நாங்கள் எப்போதும் வரவேற்போம்.

எப்போதும் எங்கள் ஆதரவும் ஒத்துழைப்பும் இருக்கும் இந்த முயற்சிகளை எமது மக்களும் வரவேற்பார்கள். எங்கள் தலைவர் அவர்களும் மிகுந்த எதிர்பார்ப்போடு இருந்தவர். அனைத்து தமிழ்க் கட்சிகளும் ஒருங்கிணைந்து தமிழ்மக்களுடைய பிரச்சினைகளில் இணைந்து செயற்படவேண்டும் என்பது அவருடைய எதிர்பார்ப்பு. அந்த வகையில் இன்றைய சந்திப்பு ஆக்கபூர்வமாகவும் வெளிப்படையாகவும் அமைந்தது. எதிர்காலத்தில் ஆக்கபூர்வமான விளைவுகள் ஏற்படும் என்றே நம்புகிறேன்.

***கேள்வி:- முஸ்லிம் கட்சிகளையும் இதற்குள் உள்ளடக்குவீர்களா?***

பதில்:- ஒன்றிணைந்து ஒற்றுமையுடன் செயற்பட ஒரு இலட்சியத்தின் கீழ் செயற்பட முன்வருவோர்களுடன் இணைந்து செயற்பட தயாராகவுள்ளோம். நாங்கள் இணைந்து செயற்படுவதற்கு எதிரானவர்கள் அல்ல. தமிழ்பேசும் மக்களுடைய எதிர்காலம் தொடர்பாக ஒன்றிணைந்து செயற்பட எவர் வருகின்றார்களோ நாங்கள் அவர்களையெல்லாம் வரவேற்போம். இணைந்து செயற்படுவதற்கு எங்களுடைய பூரண ஆதரவையும் வழங்குவோம்.

***கேள்வி:- முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைவர் அவர்களை சந்திக்கயிருப்பதாக கூறியிருக்கின்றாரே?***

பதில்:- பத்திரிகை அறிக்கைகள் மட்டும் நல்லுறவு சந்திப்பை ஏற்படுத்தாது. சந்திப்புக்கான உண்மையான முயற்சிகளை எடுக்கவேண்டும். உண்மையான முயற்சிகள் தான் ஆக்கபூர்வமான விளைவுகளைத் தரும்.

***கேள்வி:- இலங்கை அரசாங்கம் விடுத்திருக்கின்ற சமாதானம் தொடர்பான கோரிக்கைகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு எப்படியுள்ளது.? ஆசிய நாடுகளில் தான் பேச்சுவார்த்தைகள் நடைபெறவேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. தொடர்பாக?***

பதில்:- தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டில எந்தவிதமான மாற்றமும் இல்லை. எமது தலைமைப் பீடத்தின் நிலைப்பாடு தொடர்பாக நோர்வே தரப்போடு கலந்துரையாடியுள்ளோம். அச் சந்திப்பிலேயே எமது விருப்பத்தை தெரிவித்திருந்தோம். பேச்சுவார்த்தைக்கு நாங்கள் எப்போதும் தடையாக இருக்கப்போவதில்லை. அமைதி முயற்சிகள் அனைத்துக்கும் அடிப்படையாக இருக்கின்ற யுத்தநிறுத்த உடன்பாடு சீருலைவுற்று போகின்ற ஆபத்தான கட்டம் ஏற்பட்டிருக்கின்றது. இதனை சீர் செய்வதற்கு யுத்தநிறுத்த உடன்பாட்டை முழுமையாக அமுலாக்குவதற்கான பேச்சுக்களில் ஈடுபடுவதற்கு தயாராக உள்ளோம் என்பதையும் அப் பேச்சுவார்த்தைகள் ஐரோப்பிய நாடுகள் ஏதாவதொன்றில் குறிப்பாக, நோர்வே அனுசரணையாளர்களாக இருப்பதனால் நோர்வேயில் முதல்கட்ட பேச்சுக்களை தொடங்கலாம் என்பதை எமது விருப்பமாக தெரிவித்திருந்தோம். எங்கள் நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை. இலங்கை அரசாங்கம் ஆசிய நாடொன்றில்தான் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்றும், ஐரோப்பா புலிகளை தடைசெய்ய வேண்டுமென்றும், புலிகள் தொடர்பான இறுக்கமான நிலைப்பாட்டை கடைப்பிடிக்க வேண்டுமெனவும் வலியுறுத்தி வருவது ஒரு சதிமுயற்சியாகத்தான் நாங்கள் பார்க்கின்றோம்.

அதாவது பேச்சுவார்த்தைகளுக்கு அனுசரணையாளராக நோர்வே உள்ளது. பல நாட்டிக்நாடுகள் கண்காணிப்புக்குழுவில் அங்கத்துவம் பெறுகின்றார்கள். ஐரோப்பிய நாடுகளுடைய பங்களிப்பும், ஈடுபாடோடும்தான் சமாதான சூழல் முன்னெடுக்கப்படும் நிலையில் ஐரோப்பிய நாடுகளை புறந்தள்ளிக்கொண்டு ஆசிய நாடுகளில் பேச்சுவார்த்தை நடத்தப்படவேண்டும். அனுசரணையாளர்களாக, கண்காணிப்பாளராக ஐரோப்பிய நாடுகள் பணியாற்ற வேண்டும் என்ற குழப்பமான முடிவுகள் எடுப்பதை நாங்கள் ஏற்றுக்கொள்ளமுடியாது.

நாம் தெளிவாக நோர்வே தரப்புக்கு கூறியுள்ளோம். பேச்சுவார்த்தை என்பது அனுசரணையாளர்களுடைய நடுநிலைமையோடு பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். குறிப்பாக யுத்தநிறுத்த உடன்பாட்டை அமுல்படுத்துவது சம்பந்தமாக இரண்டு தரப்பு உயர் மட்டக்குழுவும் உடனடியாக சந்தித்து கலந்துரையாடி உடனடியாக செயலிழந்து, சீர்குலைத்து போகின்ற யுத்த நிறுத்த உடன்பாட்டை நாங்கள் வலுப்படுத்தவேண்டும். அதற்கான பேச்சுவார்த்தைகள் உடனடியாக மேற்கொண்டு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளவேண்டும். பேசுவது மட்டுமல்ல உடனடியாக நடைமுறைப்படுத்தி முழுஅளவில் நம்பிக்கையிழந்துள்ள மக்களுக்கு ஓரளவு நம்பிக்கையை கொடுக்க கூடியளவுக்கான செயற்பாடுகளில் இறங்குவதன் மூலம் இன்றைய நிலையை ஓரளவுக்கேனும் சீர்செய்யலாம். தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் யுத்தநிறுத்த உடன்பாட்டை அமுலாக்குவது தொடர்பான பேச்சுக்களை முன்னெடுக்க வேண்டுமென்பதிலும் குறிப்பாக முதற்கட்ட பேச்சுக்களை நோர்வேயில் தொடங்குவதை நாங்கள் விரும்பிகிறோம். இந் நிலைப்பாட்டை எமது தலைமைப்பீடம் ஏற்கனவே தெரிவித்துள்ளது.

இந்நிலைப்பாட்டில் நாங்கள் எந்தவிதமான மாற்றத்தையும் கொண்டு வரவிரும்பவிலீலை. இலங்கையரசு அறிவிப்புக்களைச் செய்வது இதய சுத்தியுடனான அறிவிப்பாக எமக்கு தெரியவில்லை.

ஏற்கனவே எமது நிலைப்பாட்டை தெரிவித்திருக்கிறோம். இந் நேரத்தில் இலங்கை அரசாங்கம் ஐரோப்பிய நாடுகள் புலிகளை தடைசெய்ய வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை விடுத்துக்கொண்டிருப்பதாக செய்திகள் கசிந்துகொண்டிருக்கின்றன. இதில் ஒரு பெரிய சதியிருப்பதாகவே எங்களுக்கு தெரிகின்றது. ஏனெனில் யுத்தத்தால் எமது தாயகப் பிரதேசத்திலிருந்து பல லட்சம் மக்கள் வெளியேற்றப்பட்டு புலம்பெயர்ந்து ஐரோப்பிய நாடுகளில் வாழ்கின்றார்கள். ஐரோப்பிய நாடுகளில் தங்களுடைய கணிசமான செல்வாக்கை செலுத்தி வருகிறார்கள். இக் கட்டத்தில் இலங்கையரசாங்கம் தமிழீழ •விடுதலைப் புலிகளுக்கும் சர்வதேச சமூகத்துடனான உறவுநிலையை துண்டித்து தனிமைப்படுத்த எடுக்கும் சதிமுயற்சியாக தான் வெளிவரும் அறிவிப்புக்களிலிருந்து உணரமுடிகின்றது. பேச்சுவார்த்தைகளில் இதயபூர்வமான உண்மையான அக்கறையிருக்குமானால் அரசு மாறான அறிவிப்புக்களை அறிவிக்க வேண்டிய தேவையில்லை.

ஐரோப்பிய நாடுகள் உட்பட பல நாடுகளில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுள்ளன. ஐரோப்பிய நாடுகளை தவிர்த்துக் கொண்டு ஆசிய நாடுகளில் பேச்சுவார்த்தை நடத்தப்படவேண்டுமென்பது பேச்சுவார்த்தை செயற்பாட்டை இழுத்தடிக்க மேற்கொள்ளும் தந்திரோபாயமோ எனும் கேள்வியை எழுப்பியுள்ளது.

***கேள்வி- யசூசி அகாசி, மகிந்த ராஜபக்ஷ சந்திப்பையடுத்து வெளியான கருத்துக்கள் யசூசி அகாசி கிளிநொச்சிக்கு வருகைதராததன் நிலைப்பாடு என்ன?***

பதில்:- இதுவொரு பாரதூரமான விளைவை ஏற்படுத்தும் என்றுதான் நான் நினைக்கின்றேன். அதாவது சர்வதேச பிரதிநிதிகள், ராஜதந்திரிகள் எங்களுடைய தாயகப் பிரதேசத்திற்கு வருகை தருவதை தடுப்பதென்பது உண்மையிலேயே எமக்கும்தான், மக்களுக்கும்தான் கடந்த காலங்களை நினைவுக்கு கொண்டு வருகின்றது. எமது தாயகப் பகுதிக்கு ராஜதந்திரிகளையும், சர்வதேச பிரதிநிதிகளையும் வருவதைத் தடுத்து நிலைமைகளை நெருக்கடிக்குள்ளாக்கி உலக நாடுகள் உண்மையை அறியவிடாமல் பெரியதொரு இன அழிப்புப் போரைக் கூட முன்னெடுக்க துணிகிறார்களோ என்ற சந்தேகம் ஏற்படும் சூழல் உருவாகியுள்ளது. இந்த பின்னணியில் தான் சிந்திக்கின்றோம். சர்வதேச சமூகம் இலங்கையரசாங்கத்தின் சதிமுயற்சிகளுக்கு பலியாகிவிடக்கூடாது என்பது எங்களுடையதும், மக்களுடையதும் நிலைப்பாடாகவுள்ளது. இருபது வருடங்களுக்கு மேலாக ஒருகொடிய போரைச் சந்தித்து மனிதாபிமான நெருக்கடிகளைச் சந்தித்த மக்களாக எமது மக்கள் உள்ளார்கள். சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்குகூட கடந்த ஒரு வருடகாலமாக எந்தவித சர்வதேச. உதவிகளும் கிடைக்கவில்லை.

பெரும் அவலமான வாழ்விற்குள் எமது மக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள். சமாதான முயற்சிகளில் முழு அளவில் நம்பிக்கையிழந்து விரக்தியின் விிம்பில் நிற்கின்ற மக்களுக்கு சர்வதேச பிரதிநிதிகள்கூட வந்த உண்மை நிலையைபார்ப்பதற்கு இலங்கை அரசு தடுத்துவருவதன் மூலமாக அரசின் பாரிய சதிமுயற்சியை எம்மால் உணரமுடிகின்றது. அமைதி முயற்களில் சர்வதேச சமூகம் காட்டிவரும் அக்கறை காரணமா கத்தான் தமிழினம் ஓரளவேனும் நம்பிக்கை கொண்டு இருக்கின்றார்கள்.

இதனைக்கூட சிறலங்கா அரசாங்கம் தடுத்து நல்லெண்ண முயற்சிகளை உதாசீனப்படுத்துவது என்பது மீண்டும் தமிழ் மக்கள் மீது இன அழிப்புப்போரை முன்னெடுக்கின்ற சதி முயற்சியாக இருக்கலாம் என்று சந்தேகிக்க வைக்கின்றது.

***கேள்வி:- அரசிடம் இருந்து பேச்சுவார்த்தைக்கு வருமாறு அழைப்பு வந்திருக்கிறது. இதனை நீங்கள் ஏற்றுக்கொள்கின்றீர்களா? நிராகரிககிறீர்களா?***

பதில:- அரசிடமிருந்த அழைப்புவருவதற்கு முன்னர் நாங்களே பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுத்தி ருந்தோம். யுத்தநிறுத்த உடன்பாட்டை செம்மையாகப் பேணுவதன் மூலமாக நம்பிக்கைகளை கட்டியெழுப்பி மீண்டும் சமாதானச் சூழலை உறுதியாக்கி கொள்வதற்கு இருதரப்பு உயர்மட்டக்குழுவும் சந்தித்து பேச வேண்டுமென்பது எமது நீண்டகால கோரிக்கை. அரச தரப்பிடமிருந்து தற்போது இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளதை நாங்கள் ஏற்கின்றோம். இவ் அறிவிப்பானது இதயசுத்தியுடனான உண்மையான அறிவிப்பாக இருக்கவேண்டும். என்பதுதான் இன்றைய எமது நிலைப்பாடு. ஏனெனில் ஆசிய நாடுகளில் தான் பேச்சுவார்த்தை இடம்பெறவேண்டும் என்று நிபந்தனைகளைப் போடுவது என்பது காலத்தை இழுத்தடிக்கும் செயலாகத் தான் எம்மால் உணரமுடிகின்றது.

***கேள்வி:- சமாதான முயற்சிகளிலான இணைத் தலைமை நாடுகளில்,மாற்றங்கள் ஏற்படுமென தெரிகிறது இந்நிலையில் அரசின் அழைப்பை எப்படி நீங்கள் பார்க்கிறீர்கள்?***

பதில்:- இரட்டைவேடம் போடும் இந்தப் போக்கை நாம் அனுமதிக்கமுடியாது. ஒருபுறம் அமைதி முயற்சிகளை தொடர தயாராகியிருப்பதாக காட்டிக்கொண்டு இன்னொரு புறம் தமிழர் தரப்பை பலவீனப்படுத்துகின்ற முயற்சிகளில் தீவிரமாக இலங்கை அரசாங்கம் இறங்கியிருப்பது எமக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது. ஐரோப்பிய நாடுகள் புலிகளை தடைசெய்ய வேண்டுமென்றும் பேச்சுவார்த்தைகளை ஆசிய நாடுகளில் நடத்தப்படவேண்டுமென்பதும் சர்வதேச பிரதிநிதிகள் இராஜதந்திரிகளின் வருகைகளை தடுப்பதும் எல்லாவற்றையும் ஒட்டுமொத்தமாக பார்க்கின்ற போது இலங்கை அரசாங்கம் ஒரு இதயசுத்தியுடனான நேர்மையான போக்கை எடுக்கவில்லை என்பதைத்தான் உணரமுடிகிறது.

இலங்கை அரசாங்கம் தனது போக்கை மாற்றி அமைக்கவேண்டும். சர்வதேச சமூகத்துடன் தமிழர் தரப்பின் உறவை வலுப்படுத்த இலங்கை அரசாங்கம் தடையாக இருக்கக் கூடாது. சர்வதேச சமூகம்கூட புரிந்துகொள்ளவேண்டும். சர்வதேசம் எடுத்திருக்கின்ற நடுநிலைப்பாடு அமைதி முயச்சிகளுக்கான ஆதரவு தமிழ் தரப்பபை நம்பிக்கை கொள்ள வைத்தது. தற்போதுள்ள நிலைப்பாட்டை தகர்த்தெறிவதால் சமாதான முயற்சிள் அனைத்தும் இல்லாதொழிக்கின்ற செயலாக அரசின் நிலைப்பாட்டை பார்க்க வேண்டியுள்ளது.

***கேள்வி:- இந்தியா, இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கும் இராணுவ உதவிகள் தொடர்பாக?***

பதில்- இலங்கை படைகள் தமிழ் மக்கள் மீதான ஆக்கிரமிப்புக்கள் அடாவடித்தனங்களை நிறுத்தும் போதுதான் அமைதிநிலை தோன்றும். தமிழர் தாயகத்தில் தோன்றும் அமைதி நிலைதான் இலங்கைத் தீவில் ஒட்டுமொத்தமான அமைதி நிலையை உருவாக்கும். இவ் யதார்த்தத்தை புரிந்துகொண்டு உலக நாடுகள் இந்தியாஉட்பட அனைத்து நாடுகளும் இராணுவ ரீதியிலாக இலங்கை அரசாங்காத்தை பலப்படுத்துவதும் தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்து நிற்கும் இலங்கை படைகளுக்கும் துணைபோவதாகவே தமிழ் மக்கள் எண்ணத் தலைப்படுவார்கள்.

தமிழ் மக்கள் தமது நிலைப்பாடுகளை தெரிவித்து வருகிறார்கள். இந் நிலையில் அனைத்து நாடுகளும் தமிழ் மக்களின் மனிதாபிமான பிரச்சினைகளை உரிமைப் பிரச்சினைகளை தெளிவாக புரிந்துகொண்டு தமது நிலைப்பாட்டை எடுக்க வேண்டுமென்பதுதான் எமது நிலைப்பாடு எனவும் தெரிவித்தார்.

***கேள்வி: அம்பாறையில் சிறிலங்காப் படையினரின் உலங்கு வானூர்தி தாக்கப்பட்டது தொடர்பாக?***

பதில்: இதுவொரு அபாண்டமான குற்றச்சாட்டு இது தொடர்பாக நோர்வேத் தூதரகத்திற்கும், கண்காணிப்புக்குழுவிற்கும் தெரிவித்துள்ளோம்.

.அண்மைக்காலத்தில் சர்வதேச சமூகத்தினருடனான தமிழர் தரப்பின் உறவுநிலையை சீர்குலைப்பதற்கு சிறிலங்கா அரசாங்கம் பெரிய எடுப்பிலான முயற்சிகளை மேற்கொண்டுவருகிறது. அதனுடைய கபட நோக்கமும், விசமத்தனமான ஒரு நடவடிக்கையாகத்தான் இந்த உலங்குவானூர்த்தித் தாக்குதல்.

உலங்குவானூர்திகள் எமது கட்டுப்பாட்டுப் பகுதிக்கு முன்னனுமதியுடன் பலமுறை வந்துசென்றுள்ளன. ஆனால் தாக்கப்பட்ட உலங்குவானூர்தியில் இத்தாலிய வெளிவிவகார அமைச்சர் பயணித்ததாகக் கூறப்படுகிறது.


இதுதொடர்பாக எமக்கு எதுவித தகவல்களும் இல்லை. உலங்குவானூர்தியானது எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் பயணித்ததாகவும், அது தாக்கப்பட்டதாகவும் ஒரு செய்தியை அரசதரப்பு கசியவிட்டுள்ளது. இதன் உண்மைத்தன்மை என்ன என்பது அறிய முடியாமல் உள்ளது.

எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் இப்படியான ஒரு சம்பவம் நடைபெறவில்லை என்று எமது தளபதிகள் உறுதிப்படுத்தியுள்ளனர். இது சிறிலங்கா அரசாங்கத்தினுடைய திட்டமிட்ட நடவடிக்கையாகும்.

ஐரோப்பிய நாடுகளுடனான தமிழ்த் தரப்பின் உறவைத் துண்டிப்பதற்கான அரசாங்கத்தின் திட்டமிட்ட நாடகமென்றார் சு.ப.தமிழ்ச்செல்வன்.

(ச-4,8)

# இதய அஞ்சலி



**மண்ணில்: 17.07.1927** **விண்ணில்: 16.12.2005**

**திரு. கணேசன் திருமாலழகன்**

(வலம்புரி நாளிதழின் இயக்குநர்சபை)

அவர்களின் அன்புத் தந்தையார்

## திரு. கணபதிப்பிள்ளை கணேசன்

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த கவலையடைகின்றோம். அவரின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, அவரின் ஆத்மா எல்லாம்வல்ல பரம்பொருளின் திருவடிகளில் நித்திய பேரின்பம்பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**வலம்புரிக் குடும்பம்**

## இன்று ஒரு தகவல்

# இருவகை துன்பம்

"இந்த உலகத்தில் இரண்டு வகையான துன்பங்கள்" உண்டு என்கிறார் பெர்னாட்ஷா. நாம் ஆசைப்பட்டது கிடைக்காவிட்டால் அதனால் வரும் துன்பம் ஒருவகை. நாம ஆசைப்பட்டது கிடைத்துவிட்டதென்றால் அதனால் வரும் துன்பம் ஒருவகை.

அது எப்படி? ஆசைப்பட்டது கிடைக்காவிட்டால் துன்பம் என்பது சரி! ஆசைப்பட்டது கிடைத்துவிட்டதென்றால் அது இனபம் தானே... அது எப்படி துன்பம் ஆகும். கொஞ்சம் யோசித்துப் பார்த்தால் இதை சுலபமாகப் புரிந்துகொள் ளலாம. இந்தக் காலத்து அப்பாக்கள் சிலரைக் கேட்டுப் பாருங்கள்..... அவர்கள் சொல்வார்கள்."பிள்ளை பிறக்கும வரை பிள்ளை இல்லையே என்று கவலைப்பட்டேன். பிள்ளை பிறந்ததும் ஐயோ பிள்ளை பிறந்துவிட்டானே என்று கவலைப்படுகிறேன்"என்பார்கள்.

இநதக் காலத்து அப்பாமட்டுமல்ல... அந்தக் காலத்து அப்பாவே இப்படிக் கவலைப்பட்டார். யார் அவர்? தசரதர் தான. பிள்ளைகள் பிறப்பதற்கு நீண்டகாலத்திற்கு முன்பு ஒருநாள் தசரதர் வேட்டையாடப் போனார். அப்போது... காட்டில் எங்கேயோ தூரத்தில்... யானை தண்ணீர் குடிப்பது போல் ஒருசத்தம் கேட்டது. மரம் செடி கொடிகள் மறைந்திருந்ததனால் அதைக் கண்ணால் பார்க்க முடியவில்லை. ஆனால் சத்தம் மட்டும் கேட்டது.

உடனே தசரதர் என்ன செய்தார் சப்தம் வந்த திசையை நோக்கி அம்பை விடுகிறாா. அவ்வளவுதான் "ஐயோ... அமமா... அப்பா...என்று அலறும் சத்தம் அங்கிருந்து வந்தது. அது மனிதக்குரல். இவர் அங்கே ஓடிப்போய்ப் பார்த்தார். அங்கே குளத்தில் தண்ணீர் அள்ளிக் கொண்டிருந்த ஒரு முனிகுமாரன் மீது அம்பு பாய்ந்திருந்தது. அவன் தனது கண்ணில்லாத அப்பா, அம்மாவிற்காக தண்ணீர் அள்ள வந்தவன்.இப்போது சாகக்கிடக்கிறான்.

தசரதன பதறிப் போய் நிற்கிறார்.அவன் இவரைப் பார்த்து "நான் இறப்பதைப் பற்றிக் கவலைப்படவில்லை. கண்ணில்லாத எனது பெற்றோர் அதோ அந்த மரத்தடியில் இருக்கிறார்கள. அவர்கள் குடிப்பதற்கு இந்த தண்ணீரைக் கொண்டு போய்க்கொடுங்கள்" என்கிறான். அந்தக் கண்ணில்லாத முனிவர் தசரதனுக்குச் சாபம் கொடுக்கிறார். "நாங்கள் எப்படி புத்திரசோகத்தினால் சாகப் போகிறோமோ அதே போல் நீயும் சாகப்போகிறாய். ஆனால் உன் புத்திரன் சாகமாட்டான். அவனது பிரிவால் நீ சாவாய்" என்கிறார்.

சாவதைப் பற்றி தசரதன் முதலில் கவலைப்படவில்லை. ஏனென்றால்...அப்போது அவருக்குப் பிள்ளை இல்லை. ஆனால் இராமன் பிறந்ததும் "எப்போது இராமன் தன்னை விட்டுப் பிரிவானோ.தனக்கு சாவு வருமோ" என்று யோசிகக ஆரம்பிக்கிறார்.அதனால்தான் விசுவாமித்திரர் "இராமனைத் தா"என்று சொன்னதும் "மார்பில் வேல் நுழைந்து.... அதனால் உண்டான புண்ணுக்குள் நெருப்பு நுழைந்தால் எப்படி இருக்குமோ அப்படி தவித்தாராம்" தசரதர். "கண்ணிழந்தான்,நெற்றிழந்தான் என உழந்தான்" என்கிறார் கம்பர்.

அதாவது கண்இல்லாதவன் கண்ணைப் பெற்று அதை மீணடும் இழந்தால் எப்படித் தவிப்பானோ அப்படித் தவித்தான் என்கிறார். இங்கே கண்ணிலான் என்பது சாபம் கொடுத்த முனிவரையும் குறிக்கும்.

"அவர் எப்படி தம்முடைய மகனை இழந்து தவித்தாரோ அப்படித் தவித்தான்" என்றும்அர்த்தம் கொள்ளலாம். இப்போது தசரதனின் நிலையை நினைத்துப பாருங்கள். பெர்னாட்ஷா சொன்னதையும் நினைத்துப் பாருங்கள் ஆசைப்பட்டது கிடைக்காவிட்டாலும துன்பம். ஆசைப்பட்டது கிடைத்தாலும் துன்பம். சரியா?

ஒரு திருடன் ஒரு கோவில் வாசலில் ஒரு மரத்தடியில கையையும் காலையும் உதறிக்கொண்டு வாள் வாள் என்று கத்தினான். அவனது நண்பன் ஒருவன் வந்தான். "ஏன் இப்படிக் கத்துகிறாய்?" என்றான். "சுவாமி கழுத்தில் உள்ள நகையை திருட வேண்டுமென ஆசைப்பட்டேன்... ஆசைப்பட்டது எனக்குக் கிடைத்துவிட்டது.

அதனபின் அந்த நகையை அதோ அந்தக் கருங்கல் தூணில் உள்ள சிங்கத்தின் சிலை இருக்கிறதே அதன் வாய்க்குள் ஒளித்து வைத்திருந்தேன். இன்று காலையில் வந்து சிலையின் வாயில் கையைவிட்டேன். நகையை எடுக்க அது கடித்துவிட்டது.அதுதான் துள்ளுகிறேன்" என்றான்.

"கருங்கல் சிலை எப்படியடா கடிக்கும்"என்றான் அவன். "கடிததது அந்தச் சிலையில்லை... அதன் வாய்க்குள் இருந்த தேள்" என்று கூறிவிட்டு மீண்டும் துள்ள ஆரம்பித்தான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# எமது பலத்தால் மட்டுமே வெற்றியை தீர்மானிக்க முடியும் -கேணல் சூசை

(கொழும்பு)

எமது பலத்தால் மட்டுமே வெற்றியினைத் தீர்மானிக்க முடியுமென தமிழழக் கடற்புலிகளின் சிறப் புத்தளபதி கேணல் சூசை தெரிவித்துள்ளார். கடற்புலி மாவீரர் லெப் கேணல் மறவன் மாஸ்ரரின் முதலாம் ஆண்டு நிறைவு நிகழ்வில் சிறப்புரை யாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற றுகையில், 1985ஆம் ஆண்டு முதல் அரசதரப்புடன் பல்வேறுபட்ட பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டன. இதன்மூலம் நாம் எந்தவொரு வெற்றியினையும் பெறவில்லை. கடந்த காலங்களில் நாம் ஒரு பலமான நிலையில் இருந்து போரிட்டு பல வெற்றிகளைப் பெற்றிருக்கின்றோம். ஆனால், தற்போதுள்ள சமாதான காலத்தில் எந்தவொரு மாற்றமும் நடைபெறவில்லை. உயர்பாதுகாப்பு வலயங்களை நீககவோ ஒட்டுக்குழுக்களின் ஆயுதங்களைக் களையவோ அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. எமது மக்களின் பொருளாதாரத்தினை மேம்படுத்துகின்ற கடலவள நிறுவனம் அனைத்துமே இராணுவத்தின் அதிஉயர் பாதுகாப்பு வலயமாக இருந்து வருகின்றது.



இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்தில் இருந்து பேச்சுக்கள் மூலம் எதனையும் நாம் பெறவில் லை என்றும் குறிப்பிட் டார்.

வடமராட்சி கிழக்கு பொது விளையாட்டு மைதானத்தல நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் கடல் புலிகளின துணைப்படை யினரின் அணிவகுப் புடன் ஆரம்பமான இந்நிகழ்வில் ,பொதுச்சுடரினை கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை ஏற்றி வைக்க தமிழீழத் தேசியத் கொடியினை வடமராட்சி கிழக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் அன்பழகன் ஏற்றிவைத்தார்.


தொடர்ந்து லெப் கேணல் மறவன் மாஸ்ரரின் திருவுருவப்படத்திற்கான ஈகைச்சுடரினை அவரது மனைவி ஏற்றிவைக்க மலர் மாலையினை திருகோணமலை மாவட்ட கடற்றொழிலாளர்களின் கூட்டுறவுச் சங்க சமாசத்தலைவர் சேராழன் அணிவித்தார்.(ற-4)

# இ.தொ. காவை பலவீனப்படுத்தக்கூடாது என்பதில் எமது கட்சி உறுதியாகவுள்ளது

## ம.ம.மு.தலைவர் பெ.சந்திரசேகரன்

(கொழும்பு)

மலையகத்தில் தொழிற்சங்க வாதிகளின் செயற்பாடுகள் இனவாதிகளுக்கு துணைபோவதனால்



மலையக சமூகததை பாதுகாக்கும் நோக்குடன் மலையக மக்கள் முன்னணி மலையகத்தில் பலம் வாய்ந்த அமைப்புகளுடன் உறவுகளை ஏற்படுத்தும் என அக்கட்சியின் தலைவர் பெ. சந்திரசேகரன் தெரிவித்துள்ளாா.

உடுப்பு சலாவையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெறற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில, மலையகத்தில் மலையக மக்கள் முன்னணியும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் இன்று பலமிக்க அமைப்புக்களாக இருக்கின்றன.

இந்த இருகட்சிகளின் பலத்தில் தான் மலையக மக்களின் இருப்பு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்விரு கட்சிகளையும் விட மலையக மக்களை நேசிக்கின்ற கட்சிகளும் மலையகத்தில் காணப்படுகின்றனர்.

மலையக சமுதாயம் பல கூறுகளாக பிளவுபட்டு பலவீனமடைந்ததில் வன்முறைகளுக்கும் இனவாதத்திற்கும் சில தீய சக்திகள் துணை போயுளளன. இந்த நிலையில், 15 இலட்சம் மலையக மக்களுக்கும ஒரு உத்தரவாதம் இல்லாத நிலை தோன்றலாம். எனினும்,இலங்கைத் தொழிலாளர் காங்கிரசை பலவீனப்படுத்தக்கூடாது என்பதில் எமது கட்சி உறுதியாக இருக்கிறது எனவும் குறிப்பிட்டார். (ற-8)

# நீதித்துறையின் கௌரவத்தைப் பாதுகாக்க சகலரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்

## -ஜனாதிபதி மஹிந்த வேண்டுகோள்

(கொழும்பு)



நீதித்துறையின் கௌரவத்தை பாதுகாப்பதற்கு நீதித்துறையில் சேவையாற்றும் சகலரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கேட்டுக்கொண்டுள்ளார்.

நீதித்துறை சார் அதிகாரிகள் சங்கத்தின் வருடாந்த சம்மேளனம் கொழும்பில் நேற்று முன்தினம் நடாத்திய வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில நீதித்துறையின் பால் பொதுமக்கள் கொண்டுள்ள நம்பிக்கை சிதறினால் பாராதூரமான விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும் அதற்கு ஏற்றால்போல் நீதித்துறை மீது மக்கள் நம்பிக்கை வைக்கும் வகையில் நீதித்துறை செயற்படவேண்டும். வழக்கு விசாரணைகள் தாமதமாவதற்குரிய காரணங்களை நான் கண்டுகொண்டுள்ளேன்.

இந்த விடயத்தில் சட்டத்தரணிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதுடன் வழக்கு விசாரணைகளுடன் தொடர்புடையவர்களும் பாதிப்படைகின்றனர். வழக்கு விசாரணைகளில் ஈடுபடுவோா முறையாக செயற்படத் தவறும் போது அது நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் பிரச்சினையையே ஏற்படுத்தும என்றும் குறிப்பிட்டார்.

இந்த வைபவத்தில் பிரதம நிதிரசர் சரத் என் சில்வாவும் கலந்துகொண்டார். (ற-8)

# அம்பாறை மீனவர்களுக்கு த.பு.க மீன்பிடி வலைகளை வழங்கியது





(அம்பாறை)

தமிழா புனர்வாழ்வுக்கழக சுனாமி துரித புனர்வாழ்வு திட்டத்தின் கீழ் இயங்கிவரும் "மீளவும் கடலை நோக்கி" எனும் செயல் திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்ட முஸ்லிம் மீனவ சமாசத்தின் ஊடாக ஆறு சங்கங்கங்களுக்கு 150,000 ரூபா பெறுமதியான கும்பிளா, கீரிவலைகள் வழங்கப்படடுளளது.


இந்நிகழ்வு அம்பாறை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் மீன் பிடி அபிவிருத்தி உத்தியோகத்தர் யோகராசா தினேஷ் தலைமையில் நேற்று முன்தினம் மாலை 4.00 மணியளவில் நிததவூர் மீனவ சமாச கட்டத்தில் இடம்பெற்றது. இதில் சமாச உறுப்பினர்கள் குறிப்பிட்ட சங்க உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ற)

# அழுகிய நிலையில் இளம் யுவதியின் சடலம் வாழைச்சேனையில் மீட்பு

மடடக்களப்பு மாவட்டம்,வாழைச்சேனையில் அழுகிய நிலையில் இளம் யுவதி ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. வாழைச்சேனை நாக கீவன் பகுதியிலே இச்சடலம் மீட்கப்பட்டுள்ளது. இச் சடலம் நாககீவன் ஆற்றுக்கும் கடைக்கரைக்குமிடையில் காணப்பட்ட நிலையில் அப்பகுதியில் சென்றவர்களினால் அவதானிக்கப்பட்டு பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு மீட்கப்பட்டுள்ளது. 25முதல் 30 வயது வரை மதிககப்படும் இப் பெண்ணின் சடலம் வாழைச்சேனை மருத்துவமனையில் அடையாளம் காணப்படாத நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுள்ள வாழைச்சேனைப் பொலிஸார் சடலம் இது வரை அடையாளம் காணப்படவில்லையெனவும், குறித்த வயதுடைய பெண் எவரையும் காணவில்லையென முறைப்பாடுகள் எதுவும் கிடைக்காததினால் அடையாளம் காண்பதில் சிக்கல் நிலை தோன்றியுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (ற)

# இந்திய பாராளுமன்றில் வெடிகுண்டுப் புரளி பெரும் பரபரப்பு; இரு சபைகளும் ஒத்திவைப்பு



பாராளுமன்ற கட்டடத்திற்குள் வெடிகுண்டுகள் உள்ளதாக வந்த தகவலையடுத்து பாராளுமன்ற வளாகத்தைச் சுற்றி உடனடியாகத் தடுப்புக்கள் அமைக்கப்பட்டுள்ள காட்சி.

(புதுடெல்லி)

இந்தியப் பாராளுமன்றக் கட்டடத்திற்குள் வெடிகுண்டு இருப்பதாகக் கிடைத்த தகவலை அடுத்து பாராளுமன்ற வளாகத்திற்குள இருந்த பிரதமர், அமைச்சர்கள், எம்.பிக்கள் உள்ளிட்ட அனைவரும் அவசர அவசரமாக வெளியேற்றப்பட்டனர்.

பாராளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் நேற்றுமுன்தினம் வழக்கம் போல் நடைபெற்றுக் கொண்டிருந்தது. லோக்சபை, ராஜ்யசபை ஆகிய இரு சபைகளிலும் கேள்வி நேரம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. பாராளுமன்ற வளாகத்தில் உள்ள ஒரு பகுதியில் பிரதமா மன்மோகன் சிங்கும் தமிழக முதல்வர் ஜெயலலிதாவும் முக்கிய ஆலோசனை நடத்திக் கொண்டிருந்தனர்.

அப்போது பாராளுமன்றக் கட்டடத்தில் வெடிகுண்டு வைக்கப்பட்டிருப்பதாக பாதுகாப்புத்துறையினருக்குத் தகவல் கிடைத்தது. இதனை அடுத்து பாதுகாப்புத்துறையினர் உஷாரானார்கள். இது குறித்து லோக் சபை சபாநாயகருக்கும் ராஜ்யசபை தலைவருக்கும் தகவல் கொடுக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் காலை சுமார் 11.50 மணிக்கு இந்தத் தகவல் கிடைத்ததும் லோக்சபை சபாநாயகர் சோமநாத் சட்டர்ஜி சபையை பிற்பகல் 1 மணி வரை ஒத்தி வைத்தார். இதேபோல ராஜ்ய சபையை சபை தலைவர் பைரோன்சிங் செகாவத்தும் சபையை பிற்பகல் 1 மணி வரை ஒத்திவைத்தார். சபையிலிருந்து அனைவரும் உடனடியாக வெளியேறுமாறும் அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

இதனையடுத்து சபையிலிருந்து மத்திய அமைச்சர்கள், எம்.பிக்கள், ஊழியர்கள்



வெடிகுண்டு மிரட்டலைக் கேள்விப்பட்டதும் மோப்ப நாய்களுடன் விரைந்து செல்லும் பாதுகாப்பு அதிகாரிகள்.

உள்ளிட்ட அனைவரும் அவசர அவசரமாக வெளியேற்றப்பட்டனர்.

பிரதமர் மன்மோகன்சிங், சௌத் பிளாக்கில் உள்ள அவரது அலுவலகத்திற்கு பாதுகாப்புடன் அழைத்துச் செல்லப்பட்டார். இதே போல தமிழக முதல்வர் ஜெயலலிதாவும் பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

பாராளுமன்றத்தில் செய்தி சேகரிக்கச் சென்றிருந்த பத்திரிகையாளர்களும் இதர



சுற்றுவட்டாரத்தில் வாகனப் போக்குவரத்துக்கள் ஸ்தம்பிதம்.

பார்வையாளர்களும் வெளியேற்றப்பட்டனர்.

அதற்குள் வெடிகுண்டுகளைக் கண்டுபிடிக்கும் குழுவினரும் வெடிகுண்டுகளைச் செயல் இழக்கச் செய்யும் குழுவினரும் மோப்ப நாய்களுடன் சென்று பாராளுமன்ற வளாகத்தில் தீவிரமான சோதனையில் ஈடுபட்டனர். பாராளுமன்றத்தைச் சுற்றியுள்ள தெருவில் சீல் வைக்கப்பட்டன. பிரதமர் அலுவலகம், இராணுவ, உள்துறை, நிதி அமைச்சகங்கள் போன்ற முக்கிய அரசு கட்டடங்கள் உள்ள செத் பிளாக் மற்றும் நோர்த் பிளாக் பகுதிகளில் உள்ள வீதிகள் அனைத்திற்கும் சீல் வைக்கப்பட்டன.

துப்பாக்கி ஏந்திய பாதுகாப்புப் படையினரும் இராணுவத்தினர் பாராளுமன்ற வளாகத்தைச் சுற்றி உஷார் நிலையில் நிறுத்தப்பட்டிருந்தனர்.

கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு அதாவது 2001ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13ஆம் திகதி பாராளுமன்றத்தின் மீது பாக். தவிரவாதிகள் நடத்திய தாக்குதலின் போது ஏற்பட்ட பரபரப்பு அங்கு காணப்பட்டது.

சுமார் ஒன்றரை மணி நேரம் பாராளுமன்றத்திற்குள்ளும் வெளியேயும் துருவி, துருவி சோதனை நடத்தப்பட்டது.

எந்த இடத்திலும் வெடிகுண்டு எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை. இது வெறும் புரளி என்று பாதுகாப்புப் படை அதிகாரிகள் கூறினர்.

இது வெறும் வெடிகுண்டு புரளிதான் என்பது தெரிந்த பிறகு பாராளுமன்றத்தின் இரு சபைகளும் பிற்பகல் 3 மணிக்கு மீண்டும் வழக்கம் போல் கூடியது. சபை அலுவல்கள் வழக்கம் போல் நடைபெற்றன. லோக்சபை சபாநாயகர் சோமநாத் சட்டர்ஜி பேசுகையில், பாதுகாப்பில் எந்த மீறலும் இல்லை என்று திருப்தி தெரிவித்தார். இது போன்ற அச்சுறுத்தல்களுக்கு நாம் பயப்படமாட்டோம் என்றும் அவர் கூறினார்.



வழக்கம் போல் நேற்றுமுன்தினம் தொடங்கிய பார்லிமென்ட் நடவடிக்கைகளின் இடையே திடீரென காலை 11.45 மணிக்குக் கிளம்பிய வெடிகுண்டு மிரட்டல் அப்பகுதி முழுவதையும் பீதியில் உறையச் செய்தது.

இதே போல ராஜ்ய சபையிலும் சபை அலுவல்கள் வழக்கம் போல் நடைபெற்றன. (ற)

# பல சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையில் யாழ். ஊடகவியலாளர்கள்

## சுதந்திர ஊடக இயக்கம்

(கொழும்பு)

'நமது ஈழநாடு' அலுவலகத்தில் ஸ்ரீ லங்கா இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளுக்குச் சுதந்திர ஊடக இயக்கம் கவலை தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பின் பேச்சாளர் சுனந்த தேசப்பிரிய வெளியிட்டுள்ள அறிக்கையில்,

யாழ்ப்பாணத்தில் தமிழ் நாளிதழான 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் ஸ்ரீலங்கா இராணுவம் தேடுதல் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது கவலை அளிக்கிறது. யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவருகின்ற 4 முக்கிய நாளிதழ்களில் நமது ஈழநாடும் ஒன்று.

இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதியில் தனிநாடு கோரி ஆயுதம் ஏந்திப் போராடுகின்ற தமிழ்த் தேசிய சக்திகளுக்கு ஆதரவாகத் தனது தலையங்கங்களை யாழின 4 நாளிதழ்களுமே எழுதி வருகின்றன.

யாழ்ப்பாணத்தில் கடந்த சில வாரங்களாக அதிகரித்து வரும் வன்முறைகளின் வெளிப்பாடாகவே தற்போதைய சூழ்நிலையை நாம் அணுகுகின்றோம். இந்த எதிர்பாராத சூழ்நிலையினால் பல இராணுவத்தினா, போராளிகள், பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதற்கு முன்னரும் யாழ்ப்பாண ஊடகங்களுக்கு என்ன நடந்ததோ அதே சூழ்நிலைக்கும் இப்போதும் அவை முகம் கொடுக்க வேண்டிய நிலையில் இருப்பதாக நாம் அச்சமடைகிறோம்.

அமைதியற்ற சூழ்நிலையின் வெளிப்பாடாக இராணுவத்தினர் மேற்கொண்ட இநதத் தேடுதல் நடவடிக்கையானது கருத்து மற்றும் தகவல் சுதந்திரத்தை நசுக்குவதையும் இராணுவத்தின் நெருக்குவாரங்களுக்கு ஊடகங்கள் உள்ளாவதையும் வெளிப்படுத்தி இருக்கிறது.

ஒவ்வொரு நாளும் போர் மேகங்கள் சூழ்ந்துள்ள இந்தச் சூழலில் சவாலான நிலைமைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையில் யாழ்.ஊடகவியலாளர்கள் உள்ளனர்.

இனப்பிரச்சினையின் தொடர்புடைய இருதரப்பினரும் கருத்து மற்றும் தகவல் சுதந்திரத்திற்கு உரிய மதிப்பளித்து ஊடகங்களை இலக்கு வைக்காமல் இருக்க வேணடும் என்று வேண்டுகோள் விடுக்கிறோம் எனத தெரிவிக்கபபட்டுள்ளது. (ற)

## காப்புறுதி பற்றி விளக்கமளிப்பு

(சாவகச்சேரி)

புகைத்தல் மற்றும் மது அருந்துவதில் வணாக்கும் பணத்தை காப்புறுதியில் செலுத்தும் போது உடலுக்கு ஏற்படும் தீங்கு தவிர்க்கப்படும் அதேவேளை பணமும் சேமிக்கப்படுகிறது.

எதிர்பாராது ஏற்படும் நோய் அல்லது விபத்துக்களின் போது தேவையான மேலதிக பணத்தேவையை காப்புறுதிமூலம் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும் என ஜன சக்தி காப்புறுதி ஸ்தாபனத்தின் யாழ்.மாவட்ட முகாமையாளர் ஜெ.ஜெயகுலராசா சாவகச்சேரி நகரசபை சுகாதாரத் தொழிலாளர்கள் மத்தியல் காப்புறுதி பற்றி விளக்கும்போது தெரிவித்தார்.

காப்புறுதி அலுவலர்களான எம்.சசிதரன், ஜி.கருணாதரன், எஸ்.சுந்தரேசன் ஆகியோரும் காப்புறுதியின் நன்மைகள் பற்றிய விளக்கமளித்தனர். (த-29)

# திருமறைக் கலாமன்றத்தில் ஒளிவிழா நிகழ்வுகள்

திருமறைக் கலாமன்றத்தால் வருடந்தோறும் நடத்தப்படும் கிறிஸ்து பிறப்பு ஒளிவிழா நிகழ்வுகள் இன்று மாலை 6.45 மணிக்கு திருமறைக் கலாமன்ற அரங்கில் இடம்பெறவுள்ளது.

திருமறைக் கலாமன்றக் கலைஞர்களும், பதினொரு தேவாலயங்களின் பாடகர் குழாம்களும் இணைந்து வழங்கவுள்ள இந்த நிகழ்ச்சி முற்றிலும் கிறிஸ்மஸ் கரோல் கீதங்களைக் கொண்டதாக ஒளி, ஒலி, இசையமைப்புக்களுடன் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்ச்சியில், கத்தோலிக்கத் திருச்சபையைச் சேர்ந்த பஷையூர்புனித அந்தோனியார் ஆலயம், குருநகர் புனித யாகபபர் ஆலயம், பாண்டியன்தாழ்வு புனித அன்னம்மாள் ஆலயம், கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயம், கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயம், சுண்டிக்குளி புனித யுவானியார் ஆலயம், நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலயம், நாவாந்துறைப் பங்கு என்பனவும், அங்கிலிக்கன் திருச்சபையைச் சேர்ந்த நல்லூர் புனித யாக்கோப்பு ஆலயம், சுண்டிக்குளி புனித திருமுழுக்கு யோவான் ஆலயம் என்பனவும் திருமறைக் கலாமன்றக் கலைஞர்களும் கிறிஸ்மஸ் கரோல் கீதங்களை வழங்கவுள்ளார்கள். (த-132,133)

# உள்விவகார அமைச்சு டலஸ் அழகப்பெருமவுக்கு?

மறைந்த முன்னாள் அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரின் நாடாளுமன்ற உறுப்பினா வெற்றிடத்திற்கு சுதந்திரக் கட்சி சார்பில் நியமிக்கப்பட்டுள்ள டலஸ் அழகப்பெரும நாளை ஏற்றுக்கொள்வார் என அரச வட்டாரங்கள தெரிவிக்கின்றன.

இவர் இந்த வெற்றிடத்திற்கு நியமிக்கப்பட்டிருப்பது தொடர்பாக நாடாளுமன்ற செயலாளர் நாயகத்திற்கும், தேர்தல்கள் ஆணையாளருக்கும் அறிவிக்கப்படடுள்ளது.

இதேநேரம் டலஸ் அழகப்பெரும ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு மிகவும் நெருக்கமானவர் என்பதினால், வெற்றிடமாக இருக்கும் அமைச்சான உள்விவகார அமைச்சு இவருக்கு வழங்கப்படலாம் எனவும் அதேவேளை துணைப்பாதுகாப்பு அமைச்சர் பதவியும் வழங்கப்படலாம் எனவும் அரசியல் வட்டாரங்கள் எதிர்வு கூறுகின்றன. (ற)

# ஜனாதிபதி மஹிந்த 27 இல் இந்தியாவிற்கு விஜயம்

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 27ஆம் திகதி முதல் 30 ஆம் நாள் வரை இந்தியப் பயணம் மேற்கொள்கிறார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

இந்தியக் குடியரசுத் தலைவர் ஏ.பி.ஜே. அப்துல்கலாமின் அழைப்பையடுத்து மஹிந்த ராஜபக்ஷவும் அவரது துணைவியார் சிராந்தியும் அரச முறைப்பயணமாக இந்தியா வருகை தருகின்றனர்.

இந்திய இலங்கை உறவும் சிறப்பாகவுள்ளது. அரசியல், வர்த்தகம் மற்றும் முதலீட்டு நிலைகளில் நல்ல புரிந்துணர்வு உள்ளது. இந்த உறவை மேலும் வலுப்படுத்தும் வகையில் மஹிந்தவின் பயணம் அமையும் என்று தெரிவிக்கப்பட்டுளளது. (ற)

# திருமறைக் கலாமன்ற இயக்குநருக்கு 'கலைஞான வித்தகர்' பட்டம்

திருமறைக் கலாமன்றத்தின் 40 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கடந்த பதினொராம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஐக்கிய இராசசியம் புறோம்லி நகரின் கிளின்போட்ரவுன மண்டபத்தில் இடம்பெற்ற 'கலைப் பொங்கல' விழாவில் திருமறைக் கலாமன்ற இயக்குநர் பேராசிரியர் ந.மரியரேவியர் அடிகளாருக்கு ஐரோப்பிய யூனியனின் நாடாளுமன்றப் பிரதிநிதி றொபோட் இவானினால் 'கலைஞான வித்தகர்' என்னும் பட்டம் சூடடப்பட்டு, பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படடது.

இந்நிகழ்வில் பல நூற்றுக்கணக்கான ரசிகர்களும், ஐக்கிய இராச்சிய திருமறைக் கலாமன்ற பிரதிநிதிகளும் கலந்து சிறப்பித்தார்கள். (த-132,133)


## கொக்குவில் இந்துவில் நூல் வெளியீட்டு விழா

(கொக்குவில்)

கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க நூல் வெளியீட்டு விழா இன்று முற்பகல் 10.00 மணிக்கு கொக்குவில் இநதுக் கல்லூரி சுப்பிரமணியம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (த-7)

# மகளிர் உலகம்

## கவனமாக கையாளுங்கள்



பிள்ளையின் ஆளுமை முழுமையாகவும், இணக்கமாகவும் வளர்ச்சி அடைவதற்கு மகிழ்ச்சியும், அன்பும் புரிந்து கொள்ளுதலும் நிறைந்த ஒரு குடும்ப சூழல் தேவை. என் பிள்ளை நன்றாக வளரவேண்டும் என்பதே ஒவ்வொரு தாயினதும் எதிர்பார்ப்பும் ஆதங்கமுமாகும். பிள்ளைகள் கள்ளம் கபடமற்ற வெள்ளை உள்ளம் படைத்தவர்கள், அவர்கள் கண்ணாடியைவிடவும் கவனமாகக் கையாளப் படவேண்டியவர்கள்.

நாம் எவ்வளவுதான் சொன்னாலும் எமது பேச்சைப் ப்ள்ளைகள் கேட்கமாட்டார்கள். அடுத்தவர்கள் சொல்லியாவது கேட்கட்டும் என்ற ஆதுங்கத்தில் அநேகமான பெற்றோர்கள் பலர் முன்னிலையில் தமது பிள்ளைகளின் குறைகளைச் சொல்லிகாட்டுவார்கள். இப்படிச் சொல்வதனால் பிள்ளைகள் தமது தவறுகளைத் திருத்திக்கொள்வார்கள் என்பதே பெற்றோரின் எதிர்பார்ப்பு.

ஆனால் இப்படிச் செயவதனால் பிள்ளைகள் தமது குறைகளைத் திருத்திக் கொள்ள மாட்டார்கள். மாறாக எம்மைப் பற்றித்தான் எல்லோருக்கும் தெரியுமே, எனவே எப்படி வேண்டுமானாலும் நடந்துகொள்ளலாம் என்ற நினைப்பில் கடுமையாக நடந்து கொண்டு முன்னரை விட அதிகமாகத் தவறுகளைச் செய்ய முயலும் சிறுவர்களும் இருப்பர்.

சற்று கை நழுவினால கணணாடி விழுந்து நொருங்கி விடுகின்றது. அதேபோலத்தான் பிளளைகளும். அவர்களைத் தவறாகக் கையாண்டால் நொருங்கி விடுவார்கள். எனவே இதனைப் புரிந்துகொண்டு ஒவ்வொரு பெறறோரும் குறிப்பாகத் தாய், பிள்ளைகள் மகிழ்ச்சியாக இருக்கும்போது பக்குவமாக எடுத்துச் சொன்னால் நிச்சயம் பிள்ளை அதனை ஏற்றுக்கொண்டு, புரிந்து கொண்டு தவறான தனது பழக்கவழக்கங்களை மாற்றிக் கொள்ளும்.

பாராட்டுக்கும், புகழ்ச்சிக்கும் மயங்காதவர்கள் எவருமே இல்லை. அடுத்தவர் முன்னிலையில் உங்கள் பிள்ளைகளைப் பாராட்டிப் பேசிப்பாருங்கள். தமது பெயரைத் தக்க வைத்துக்கொள்ள உற்சாகத்துடன் நடந்து கொள்வார்கள். பல குடும்பங்களில் இந்தப் புரிந்து கொள்ளுதல் இல்லாததால் பிள்ளைகள் மனரீ தியாகப் பாதிக்கப்படுகின்றார்கள்.

எனவே, இதனைப் பெற்றோர் உணர்ந்து செயற்பட்டால இல்லம் குதூகலிக்கும்.

## வழுவழுப்பான வசீகரம்... உங்கள் வசம்...



♦வேப்பிலையை விழுதாக அரைத்து எலுமிச்சம் பழச்சாற்றுடன் கலந்து முகத்தில் தடவி அரை மணி நேரம் கழித்துக் கழுவினால் முகம் பளிச்சென மாறும்.

♦பாலாடையில சிறிது சர்க்கரை சேர்த்து முகத்தில் தடவித் தேய்க்கவும், சர்க்கரை ஊறும் வரை மென்மையாகத் தேய்க்கவும். பிறகு குளிர்ந்த தண்ணீ ரால் கழுவவும். முகச் சருமதின் இறந்த செல்கள் நீ ங்கி முகம் வழுவழுப்பாகும்.

♦விளக்கெண்ணெய் மற்றும் ஒலிவ எண்ணெயை சம அளவில் எடுத்து தலையில் தடவி மசாஜ் செய்து கொண்டு படுத்துவிடவும். மறுநாள் காலை சீ யக்காய்போட்டு தலையை அலசிட அலை அலையான கூந்தல் உங்கள் வசம்.

♦ஒலிவ் எண்ணெயை லேசாக சூடாக்கி தலையில தடவி மசாஜ் செய்து ஒரு பொலிதீ ன பையால் கட்டிக்கொண்டு சிறிது நேரம் கழித்து அலசினால் அளவுக்கதிகமாக வறண்டு போன கூந்தல் மாறும்.

♦பிள ச்சிங் செய்து கொள்ள பயமாக இருக்கிறதா? கொத்தமல்லி இலையை எடுத்துச் சாறு பிழிந்து அத்துடன் சிறிது தேன் மற்றும் எலுமிச்சம் பழச்சாறு கலந்து முகத்தில் தடவி சிறிது நேரம் ஊறவிடவும். பிறகு முகம் கழுவிட முகம் பிளீ ச் போல பளபளப்பாகும்.

♦கற்றாழையின் உள்ளே இருக்கும் வெண்மையான சோற்றுப் பத ஜெலலை முகத்தில் தடவி சிறிது நேரம் ஊறவிடவும். பிறகு முகம் கழுவிட முகம் நல்ல நிறம் பெறும். இது இயறகையான சன் ஸ்கிரீ னாகவும் செயற்படும்.

♦முட்டையின் வெள்ளைக் கருவோடு தேன கலந்து உதடுகளில் தடவி வந்தால் உதடுகள் சிவப்பாக மாறும்.

♦சாதம் வடித்த கஞ்சியோடு (உப்பு சேர்க்காதது) சீ யக்காய் தூளைக் கலந்து தலையில் தடவி சிறிது நேரம் ஊறி அலசிட கூந்தல் பளபளக்கும். நன்றாக வளரும்.

♦எலுமிச்சம் பழத்தின் தோல்களைக் காய வைத்து பொடி செய்து கொள்ளவும். அதனுடன தேங்காய் எண்ணெய் சேர்தது குழைத்து பாதங்களில் வெடிப்பு உள்ள இடங்களில் அழுத்தமாக தடவி சிறிது நேரம் கழித்துக் கழுவிட பாதங்கள் அழகாகும்.

## சமைத்துச் சுவைப்போம்

### கோழிப் பிரியாணி


| தேவையான பொருட்கள் | | | |
|---|---|---|---|
| இஞ்சி | - 2 துண்டு | பட்டாணிப் பருப்பு | - 15 கிராம் |
| பூண்டு | - 6 பல் | பிளம்ஸ் | - 15 கிராம் |
| சின்ன வெங்காயம் | - 125 கிராம் | கோழித் துண்டுகள் | - 1.:.4 கிலோ கிராம் |
| தயிர் | - 225 கிராம் | உப்பு | - தேவையானளவு |
| பெருஞ்சீரகம் | - 1 மேஜைக் கரண்டி | சமையல் எண்ணெய் | - தேவையானளவு |
| ரம்பை இலை | - சிறு துண்டு | கறுவாப் பட்டை | - சிறிதளவு |
| கஜு | - 15 கிராம் | ஏலக்காய் | - சிறிதளவு |
| பாதாம்பருப்பு | - 15 கிராம் | கராம்பு | - சிறிதளவு |
| பருப்பு | - 15 கிராம் | சம்பா அரிசி | - 2 கப் |
| | | மிளகாய்த் தூள் | - 2 தேக்கரண்டி |

**செய்முறை:-**

பூண்டு, இஞ்சி, வெங்காயம் இவற்றை அரைத்துக்கொள்ளவும். தயிரை நன்கு கடைந்து கொள்ளவும். சீரகத்தை வறுத்து அரைத்துக்கொள்ளவும். ரம்பை இலையைத் துண்டுகளாக்கிக் கொள்ளவும். கஜு, பாதாம் பருப்பு, பட்டானி பருப்பு, பருப்பு, பிளம்ஸ் ஆகியவற்றை ஒவ்வொன்றிலும் 15 கிராம் எடுத்து நெய்யில் வறுத்துக்கொள்ளவும். அரைத்த மசாலாவைத் தயிருடன் கலந்து, அதில் சுத்தம் செய்த கோழித் துண்டுகள், உப்புத்தூள் ஆகியவற்றையும் கலந்து 4 மணி நேரம் அப்படியே ஊறவிடவும். அதன் பின் ஒரு கனமான பாத் திரத்தில் சமையல் எண்ணெயை ஊற்றி காய்ந்ததும் கறுவாப் பட்டை, ஏலக்காய் விதைகள 1 மேஜைக்கரண்டி, 4 கராம்பு, துண்டுகளாக்கிய ரம்பை இலை, 2 தேக்கரண்டி மிளகாய்த் தூள் இவற்றைப் போட்டு வதங்கியதும், ஊற வைத்த கோழிக்கறி மசாலாவைச் சேர்த்து வாணலியை மூடிவைக்கவும். கறி வெந்து, மசாலா நன்கு வற்றி, எண்ணெய் பிரிந்ததும் இறக கிக்கொள்ளவும்.

அடி கனமான பாத்திரத்தில் 4 கப் தண்ணீா ஊற்றி கொதித்ததும் சம்பா அரிசியைப் போட்டு, தேவையான அளவு உப்பு சேர்த்து மிதமான தீயில் உதிர் உதிராக வேகவைத்து இறக்கவும் பின் இதனை 3 பாகங்களாகப் பிரித்துக்கொள்ளவும். அடி கனமான பாத்திரத்தில் 1 தேக் கரண்டி நெய் தடவி, ஒரு பாகம் சோறு அதன் மீது கோழித்துண்டுகள் என மூன்று பாகமாக ஒன்றன மீது ஒன்றாக வைத்து, மிதமான தீயில் 3 நிமிடங்கள் வைத்து இறக்கவும் கோழி பிரியாண! இப்பொழுது சாப்பிடத் தயார்.

## குழந்தைகளையும் குண்டாக்கும் குண்டு பெண்கள்...!



சாதாரண உடல் நிறை கொண்ட பெண்களுடன் ஒப்படும்போது உடல் பருமனான பெண்மணிகள் தங்கள் குழந்தைகளுக்கு அதிகமாக உணவூட்டி விடுவதாகவும், மேலும் இதற்காக அவர்கள் குறைந்தளவு நேரததையே செலவிடுவதாகவும் ஒரு ஆய்வு மூலம் தெரியவந்துள்ளது. குண்டுப் பெண்கள் கலோரி கூடுதலான உணவுகளைத் தேவைக்கு அதிகமாகவே குழுந்தைகளுக்குக் கொடுப்பதாவும், அதுபோல அவர்களுடன் குறைவான நேரததை செலவழிப்பதாகவும் இந்த ஆய்வு தெரிவிக்கிறது.

குழந்தைப் பருவத்தில் இதுபோன்று கணக்கு வழக்கில்ல[illegible]டுக்கப்படும் உணவு[illegible], அவர்கள் வளர்ந்த பருவத்தில் குண்டு ஆசாமிகளாக மாற வாய்ப்பு ஏற்படுகிறது. உடல் பருமனால் இதய நோய்களில் தொடங்கி நீரிழிவு வரை பல்வேறு பிரச்சினைகள் வர வாய்ப்புள்ளது ஏற்கனவே அறிந்த ஒன்றுதான்.

இந்நிலையில் குழந்தைகளின் உடல் நலத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டிய பெற்றோர்கள், குறிப்பாக தாயமாா கனே! இதுபோன்று குழந்தைகளுக்கு ஆபத்தை ஏற்படுத்தினால், அவர்களின் உடல் நலம் என்ன ஆகும்? என்று இந்த ஆராய்ச்சியாளர்கள் கேள் வி எழுப்பியுள்ளனர்.

அதுபோல பருமனான பெணகளுக்குப் பிறக்கும் குழந்தைகள் சாப்பிடும் உணவின் அளவு நாளுககு நாள் அதிகரிப்பதாகவும் அதன் மூலம் அவர்கள் பின்னாளில் குண்டாக வாய்ப்பு இருப்பதாகவும் கருதப்படுகிறது.

-பவானி, யாழ்.

## இல்லத்தரசிகளுக்கு...

பச்சை மிளகாயைக் குளிர்சாதனப் பெட்டியில் வைத்தால் இர ண்டு மாதங்கள் வரை கெடாமல் இருக்கும். ஒரு நிமிடம் தண் ணீரில் போட்டு வைத்து இதைப் பயன்படுத்தவும். இதே முறையில் தேங்காயையும் வைக்கலாம்.

ஒரு கோப்பை வினிகருடன் மூன்று கோப்பை தண்ணீரைக கலந்து ஜன்னல்களைச் சுததம் செய்யப் பயன்படுத்தலாம்.

துணிகளில் பட்ட எண்ணெய்க் கறையை நீக்க, முகத்திற்கு போடும் பவுடரைக் கறை மேல போடுங்கள். சிறிதுநேரம் விட்டு எப்பொழுதும் போல் துணியைக் கழுவுங்கள். கறை காணாமல போகும்.

இறைச்சியை விரைவாக சமைக்க, அத்துடன் சிறிதளவு மசித்த பப்பாளியைச் சேர்க்கவும்.

கீரையைச் சமைக்குமபோது பச்சை நிறம் மாறாமல் இருக்க சிறிதளவு அப்பச்சோடாவை அல்லது பேக்கிங் சோடாவைச் சேர்க்கவும்.

மிளகாய் வற்றல் காம்புகள், உலர்ந்த கறிவேப்பிலையைத் தூக்கியெறிந்துவிடாதீகள். அவற்றை வைத்திருந்து மிளகாய்த் தூள் அரைக்கும்போது சேர்த்து அரைத்தால் மிளகாய்த்தூள் மிகுதியாகவிருப்பதுடன் கமகம வாசனையும் பெறும்.

## அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம்

**உறுப்புரை - 06**

ஒவ்வொருவரும் எவ்விடத்திலும் சட்டத்தின் முன்னர் ஓர் ஆளாக ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு உரிமையுடையவராவார்.

**உறுப்புரை - 07**

எல்லோரும் சட்டத்தின் முன்னர் சமமானவர்கள். பாரபட்சம் எதுவுமின்றி சட்டத்தின் சமமான பாதுகாப்புக்கும் உரித்துடையவர்கள். இப்பிரகடனத்தை மீறிப்புரியப்பட்ட பாரபட்சம் எதற்கேனும் எதிராகவும் அத்தகைய பாரபட்சம் காட்டுவதற்கான தூண்டுதல் யாதேனுக்கும் எதிராகவும் எல்லோரும் சமமான பாதுகாப்புக்கு உரித்துடையவர்கள்.

## கருத்தாடல் களம்

### தேர்தல் பகிஷ்கரிப்பு சில்லறைத்தனமல்ல.

தனிநாடு, சுயநிர்ணய உரிமை, மரபுவழித்தாயகம் என்ற கோரிக்கைகளை முன் வைத்து பல வருடங்களாக போராடிவரும் தமிழர்களுக்கு மத்தியில் கடந்து சென்ற தேர்தல் தேவையில்லாத ஒன்றாகும்.

தனிநாடு, சுயநிர்ணய உரிமை, மரபுவழித்தாயகம் என்ற அடிப்படையில் தமக்கென்றொரு நாடு, அதற்கென்றொரு தலைவன், அந்நாட்டு மக்கள் என்பதே அடிப்படையாகும் அதைவிடுத்து மற்றய தலைவர்களை தெரிவு செய்யும் பொறுப்பு தமிழ் மக்களிடம் இல்லை.

தமிழ் மக்கள் இந்த தேர்தலை அங்கிகரித்து தமது வாக்குகளை பாவித்து சிங்களக்கட்சித் தலைவரை தெரிவு செய்தால் வடக்கு, கிழக்கில் வாழுகின்ற தமிழர் தங்கள் தலைவரை தேர்ந்தெடுத்து விடுதலைப்புலிகளை ஓரங்கட்டிவிட்டனர் என, நாளை அவர்கள் உலகநாடுகளுக்கு பறைசாற்றுவர். இது பயங்கரவாதிகளை அழிக்கின்றோமென்று நாடுகளை தரைமட்டமாக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் பெரிய பயங்கரவாதியான அமெரிக்காவுக்கு பெரும் வாய்ப்பாக போயிருக்கும். எனவே தேர்தல் பகிஷ்கரிப்பு சில்லறைத்தனமல்ல

யாழவன்
நல்லூர்

### முஸ்லிம் சமூகத்தை சிறுமைப்படுத்த வேண்டாம்.

யார் குற்றியென்றாலும் அரிசியாகட்டும் என்பதே முஸ்லிம்களின் நிலைப்பாடு என்ற கட்டுரையை விழிப்பின் பகுதிகளில் வாசிக்க நேர்ந்தது. இது தவறான ஒரு முன்மாதிரியாகும். ஒரு இனத்தின் அரசியல் சமூக விடுதலையானது அபிவிருத்திகளால் சமரசம் செய்ய முடியாததாகும். அபிவிருத்தி என்ற போர்வையில் கொள்கையற்று தமது சமூகத்தை விற்றுப்பிழைக்கின்ற ஒரு சில அரசியல்வாதிகளின் பல்டிகளை இது நியாயப்படுத்துகிறது.

ஒரு சமூகத்திற்கு சேவை செய்வதாயின் கட்டாயமாக ஆட்சியில் பங்கு வகிக்க வேண்டும் என்ற இந்த கருத்தானது முஸ்லிம் சமூகத்தை சிறுமைப்படுத்துகிறது என்பதே எனது கருத்தாகும்.

ஏ. எச். எம். அமீர் ஹுசைன்
கல்முனைக்குடி (கல்முனை)

### மலையக மக்களை கைவிடாதீர்கள்.

கடந்த வாரம் விழிப்பின் பதிவுகளில் மலையக மக்களுக்கு தமிழ்தேசியம் அவசியம் என்ற கட்டுரையை வாசித்தேன். மிகவும் நல்லது. ஆனால் ஏன் தமிழ் பத்திரிகைகள் இது தொடர்பில் அக்கறை காட்டுவதில்லை என்ற கேள்வி என் மனதில் நீண்ட காலமாகவே உள்ளது. மலையக மக்களது அடிப்படை பிரச்சனைகள், மலையக அரசியல்வாதிகளின் குழறுபடிகளை எழுதுகின்றவர்கள் அம்மக்களுக்கு ஒரு தனியலகு அவசியம் என்பது குறித்து ஏன் எழுதுவதில்லை என கேட்க விரும்புகின்றேன். அதேபோல வடகிழக்கு தமிழ் மக்களும் தமது சொந்த சகோதரர்களை கைவிடக்கூடாது எனக்கோருகிறேன். விடுதலை என்பது சுயநலமான ஒன்றல்ல. தயவு செய்து மலையக தமிழ் சகோதரர்களை கைவிட்டு விடாதீர்கள்.

பெரியநாயகம் சற்குணராஜா
பொகவந்தலாவை

## சமாதான நிகழ்வு

ஆசிரியர்களுக்கு மத்தியில் சமாதானத்தின் அவசியத்தினையும், விழிப்புணர்வையும், வழங்கும் நோக்கில் விழுமியக் கல்வியினூடான ஒற்றுமை எனும், கருப்பொருளில் பயிலுனர் ஆசிரியர்களுக்கான ஏழு நாள் கருத்தரங்கு ஒன்று அண்மையில் வடமத்திய தேசிய கல்விப்பீடத்தில் CIDA நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெற்றது. இதில் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் எல்லா இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 70 இற்கும் மேற்பட்ட பயிலுனர் ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.



## கண்டது.. கேட்டது.. படித்தது..

### 'சே' மகளுக்கு எழுதிய கடிதம்

கியூபாவைச் சேர்ந்த புரட்சி போராளி சேகுவேரா உலகின் சமூக பொருளாதார விடுதலைக்காக பாடுபட்டார். சோஷலிச நாடொன்றை உருவாக்குவதற்காக பொலிவியாவை தேர்ந்தெடுத்து அங்கே தனது தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்டார். தனது மகளின் 10வது பிறந்தநாளுக்கு வாழ்த்து தெரிவித்து 1966பெப்ரவரி முதலாம் திகதியிட்டு 'செ' எழுதிய கடிதத்தில் இவ்வாறு இருந்தது.

"நான் வெகுதூரத்தில் இருக்கிறேன் என்பதை நீ உணர வேண்டும். நமது எதிரிகளுடனான போராட்டத்தில் என்னால் முடிந்தவற்றை செய்ய இன்னும் நீண்ட காலத்துக்கு அவ்வாறே இருந்திடுவேன் என்பதையும் நீ உணர வேண்டும்.... இன்னும் பல வருடப் போராட்டம் எமக்கு முன்னால் இருப்பதை நீ ஞாபகத்தில் கொள்ள வேண்டும். நீ வளர்ந்து பெரிய பெரியவளானவுடன் நீயும் இதில் பங்காற்ற வேண்டும். அதுவரை நீ உன்னை நன்றாக தயார் செய்து கொள். ஒரு சிறந்த புரட்சிவாதியாக இரு. உன்வயதில் இதற்கு அர்த்தம் நிறைய விஷயங்களை கற்றுக் கொள்வதும், எப்போதும் நியாயமான காரணங்களுக்காக ஆதரவுதரத் தயாராக இருப்பதும் தான்"

# மலையக மக்கள் குறித்து புலிகளின் நிலைப்பாடு என்ன?



மலையக தமிழ் மக்கள் எப்போதுமே ஈழத்தமிழர் விடுதலைப்போராட்டத்தை ஆதரித்தே வந்திருக்கிறார்கள். தமிழீழ விடுதலைப்புலிகள் மீது பாசத்தையும் நம்பிக்கையையும் அவர்கள் வைத்துள்ளதுடன் அவ்வியக்கத்தின் தலைவரான வே. பிரபாகரன் மீது அளவற்ற நம்பிக்கையையும் நன்மதிப்பையும் வைத்துள்ளனர்.

உண்மையில் அரை நூற்றாண்டுக்கு மேலாக தொழிற்சங்கங்களாலும், இ.தொ.கா போன்ற கட்சிகளாலும் ஏமாற்றப்பட்ட அம்மக்கள் தமது விடுதலைக்கு விடுதலைப் புலிகளையே நம்பி வந்துள்ளனர் என்பதை சகலரும் அறிவர்.

என்ன நடந்தாலும் பிரபாகரன் எம்மை கைவிடமாட்டார். வடகிழக்கு பிரச்சனையுடன் தமது பிரச்சனை குறித்தும் பேசுவார். அதற்கு ஒரு தீர்வு வரும் போது தமது பிரச்சனைகளுக்கும் தீர்வு வரும். குறிப்பாக அதற்கான பேச்சுகளின் போது தமது பிரச்சனைகளையும் கவனத்தில் கொள்வார்கள் என்றே மலையக மக்கள் நம்பி வந்துள்ளனர்.

ஆனால் பிரபாகரனின் பத்திரிகையாளர் மாநாடானது அவர்களது நம்பிக்கையில் ஒரு பின்னடைவை ஏற்படுத்தியது. அம்மாநாட்டில் மலையக மக்கள் தொடர்பாக பதிலளித்த தலைவர் வே. பிரபாகரன் மலையக மக்களது பிரச்சனைகளை தீர்க்க மலையகத் தலைவர்கள் உள்ளனர் என்றும், மலையக மக்களின் வாக்குகளினால் தெரிவு செய்யப்பட்டவர்கள் என்பதனால் அவர்களே அம்மக்களின் பிரச்சனைகளை தீர்க்கக் கூடியவர்கள் என்ற கருத்தினை அவர் தெரிவித்திருந்தார்.

இது மலையக மக்களிடையே மிகவும் பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது என்பதை மறுப்பதற்கில்லை. ஆனாலும் மலையக தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் எப்போதுமே தமிழ் தேசியப்போராட்டம் வெற்றி பெறவேண்டும் என்பதே அவர்களது ஆத்மார்த்த பூர்வமான எண்ணமாக உள்ளது. எனவே தம்மீது நம்பிக்கை வைத்துள்ள தமது இனத்தவரான மலையக தமிழ் மக்கள் குறித்து விடுதலைப் புலிகள் மௌனமாக இருப்பது யதார்த்தமானதல்ல.

மலையக மக்களது பிரச்சனைகளுக்கு தீர்வாக மலையக புத்திஜீவிகளால் முன்வைக்கப்பட்ட தனியலகானது தற்போது நீர்த்துப்போயுள்ளது. குறிப்பாக இதனை தூக்கிப்பிடித்து மலையக இளைஞர்களின் நம்பிக்கையைப்பெற்ற மலையக மக்கள் முன்னணியும் 1994 இல் பதவியேற்றவுடன் அதனை கைவிட்டு விட்டது.

மேலும் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவு தெரிவித்ததினூடாக சுயநிர்ணயம், உரிமை, தமிழ்த்தேசியம் என்பனவற்றை வாய்ப் பேச்சுக்காகவாவது கூறிவந்த மலையக மக்கள் முன்னணி இம்முறை ஜனாதிபதி தேர்தலுடன் மௌனித்துப் போயுள்ளது. ஐக்கிய தேசிய கட்சிக்கு தரகு வேலை பார்த்த அவரது கைங்கரியம் பிழைத்துப் போனதே அதற்கு காரணமாகும். எனவே இந்த நிலையில் மலையக தமிழ் மக்கள் குறித்த விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு என்ன என்பதே இன்று மிகப்பெரிய கேள்வியாக உள்ளது.

ரணில் அரசுடனான சமாதான முன்னெடுப்பினை தவிர்த்து விட்டுப்பார்த்தால் அதற்கு முன்னரான முன்னெடுப்பின் போதெல்லாம் மலையக மக்கள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது. மஹிந்தவின் சிந்தனையுடனான பேச்சுவார்த்தை ஆரம்பிக்கும் அறிகுறிகள் தெரிகின்றன. மஹிந்த "யதார்த்தமான அரசியல்வாதி" ஆக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளார். அதேபோன்று இனப்பிரச்சனை தீர்வில் மலையக மக்களுக்கான தீர்வும் யதார்த்தமானதாக இருக்க வேண்டும். தமிழ் தேசியத்திற்கு வித்திட்டதில் துணை நின்றதுடன் விதைகளையும் விதைத்து அறுவடைகளையும் அனுபவித்துக் கொண்டிருக்கும் மலையக மக்கள் தொடர்பான நிலைப்பாட்டினை சம்பந்தப்பட்டவர்கள் அறிவிக்க முன் வர வேண்டும். மலையக தலைமைகள் குறித்த விமர்சனங்களை புறந்தள்ளிவிட்டு பரந்த நோக்கில் இதனை அணுக வேண்டும். ஒரே மொழி, ஒரே இனம் என்ற வகையில் இவர்கள் பலம் வேண்டப்படுகிறது. இவர்களும் பலம் வேண்டி நிற்கிறார்கள். இதுவும் யதார்த்தமாகும். எனவே புலிகள் மலையக மக்கள் குறித்து தமது மௌனத்தை கலைக்க வேண்டும் என்பதே அம்மக்களது ஏகோபித்த எதிர்பார்ப்பாகும். செய்வார்களா?

- பழ. மதிராஜன்

## வாசகர் கவனத்திற்கு...

கருத்தாடல் களத்திற்கு உங்கள் கருத்துக்களும் வரவேற்கப்படுகின்றன. அத்தோடு விழிப்பின் பதிவுகள் தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள் விமர்சனங்களையும் நாங்கள் எதிர் பார்க்கிறோம்.

எழுதி அனுப்ப வேண்டிய முகவரி

விழிப்பின் பதிவுகள்
யங் ஏசியா டெலிவிஷன்
இல, 713. டிபி. விஜயசிங்க மாவத்தை,
பெலவத்தை, பத்தரமுல்லை.
மின்னஞ்சல்முகவரி :-villippu@yatv.net

## இவ்வார விழிப்பில்...

- மனித உரிமை நிகழ்வுகள்
- திருகோணமலையின் தற்போதைய நிலை
- பல்லினத்தவர் கூடும் தெஹிவளை விஷ்ணு கோவில்
- சுனாமி பாதிப்புற்ற சிறார்களின் கலை படைப்பு
- கிறிஸ்தவ மக்களின் எதிர்பார்ப்பு

## சகோதர மொழியிலிருந்து சில துளிகள்

### எமக்குள் எல்லைகள் ஏன்?

ஆண்டாண்டு காலமாய் - நாம்
ஆரத்தழுவி நட்புக்கொண்டோம்

பரம்பரை பரம்பரையாய் - நாம்
பரஸ்பரம் மொழியை பகிர்ந்து
கொண்டோம்

கலை கலாசாரங்களை நாம்
காசில்லாமல் கவர்ந்து கொண்டோம்

வடக்கு கிழக்கு தெற்கு
வடமத்தி மலையகம் என
அரசுகள் பலவிருந்த போதும்
அன்று எம்மிடையே இனப்பிளவு
இன்று போல் இருந்ததில்லையே

வெள்ளைக்காரன் வந்தபோது
உள்நாட்டவரெல்லாம் ஒன்று கூடி
உரிமைப்போராட்டம் நடத்தினோமே

இன்று மட்டும்
எமக்குள் எல்லைகள்
எப்படி வந்தனவோ

அரசியல்வாதிகளின் அதிகார வெறிக்கு
அப்பாவி மக்கள்
பலியாகிப்போனோமே

இனவாதமில்லாமல்
இன்னுமொரு முறை
இணைந்து இருக்கும்
வரத்தைக் கொடு இறைவா


பிரியங்கா குணவர்தன




விழிப்பின் பதிவுகள் தொடர்பான மேலதிக விடயங்கள் ரூபவாஹினி 'ஐ'அலைவரிசையில் திங்கள் இரவு 7.30மணிக்கும். TNL அலைவரிசையில் செவ்வாய் இரவு 7.25 மணிக்கும் ஒளிபரப்பாகும். விழிப்பு நிகழ்ச்சி தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பவேண்டிய முகவரி :- விழிப்பு, யங் ஏசியா டெலிவிஷன், இல 713, டி.பி. விஜயசிங்க மாவத்தை, பெலவத்தை, பத்தரமுல்லை.தொலைபேசி இல 0112787041-9 தொலைநகல் இல 0112787051 மின்னஞ்சல் முகவரி villippu@yatv.net இணையத்தள முகவரி www.yatv.net

# சவால்களைக் கண்டு ஒதுங்குபவன் ஒருபோதும் சாதனை படைக்க முடியாது

வாழ்வில் வசந்தங்கள் ஏற்பட, வரும் இடர்களையும் தாங்கிக் கொண்டு எதிர்நீச்சல் போட்ட பலர் தான் முன்னேற்றம் கண்டுள்ளார்கள். உறுதியோடு உழைத்



தவர்கள் தான் உயர்ந்த நிலையை அடைந்துள்ளார்கள். எனவே எமக்கு ஏற்படும் குறுக்கீடுகள் தடைகள், சாவல்களைக் கண்டு ஒதுங்கும போது நாம் பின்னேயே செல்கின்றோம். வானிலே பறக்க விடும் பட்டமானது எதிர்த்திசையில தான் எழுந்து பறந்து வானில் நிற கின்றது. மீனானது தண்ணீரின் எதிர்திசை நோக்கியே முன்னேறிச செல்லும்.அவ்வாறு மனிதனானவனும் வாழ்க்கையை இவ்வாறு தான் வாழ வேண்டியவனாக இருக் கினறான்.

### கனனிமரியாள் கலஙகரை விளக்கு

கன்னி மரியாளுக்கும் கடவுளின அழைப்பு அவள் எதிர்நீச்சல் போடவேண்டிய வடிவிலேயே வந்தது. "மரியே அஞ்சவேண்டாம். கடவுளின் அருளைக் கண்டடைந்துள்ளீர் இதோ கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர் அவருக்கு

## பரமபிதா காட்டிய பாதை

இயேசு என்னும் பெயரிடுவீர் அவர் பெரியவராக இருப்பார். உன்னத கடவுளின் மகன் எனப்படுவார்.

(லூக்கா 1:32) என வானதூதா உரைத்தவுடன் கன்னியான மரியாள கலக்கமுற்றாள். "இது எப்படி நிகழும் நானோ கன்னியாயிற்றே" என்று வானதூதரை வினவினாள். மனித நிலையில் அவள் இடறல்பட்டாள். ஆனால் தேவதூதனின் விளக்கம் அவளைத தெளிவடையச் செய்தது. பின்னா இறைவனின சித்தத்தை மரியாள் ஏற்றுக்கொண்டாள். இதே போல மரியாளுக்கு மண ஒப்பந்தம செய்யப்பட்ட யோசேப்பின் வாழ்க்கையிலும் குழப்பம் ஏற்பட்டது. அவரும் கலக்கமுற்றார். வானதூதன் அவருடைய கலக்கத்துக்கும் விளக்கம் அளித்து கனவினிலே தெளிவுபடுத்தினார். தெளிவடைந்த யோசேப்பு மரியாளை மனைவியாக ஏற்று வாழ்வைத் தொடர்ந்தார்.

### சவால்களை எதிர்கொள்வோம்

எம்முடைய வாழக்கையிலும் பல சவால்கள் எம்மைத் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. அவற்றுககு முகம்கொடுக்க முடியாமல் பின்வாங்கி பல வேளைகளிலே நாம் ஒதுங்கி விடுகின்றோம். இதனாலே எம் வாழ்வில் வெற்றிக்கு பதில் தோல் விகளையே தழுவுகினறோம். ஆன்மீக வாழ்விலும் சரி, உலகியல் வாழ்விலும் சரி பின்னடைவுகளைச் சந்திக்கின்றோம். இறைவனிலே விசுவாசம் வைப்பதற்குப் பதிலாக உலகின் மாயைகளில் அகப்பட்டுவிடுகின்றோம. "எவனால் பலர் வாழ்கின்றார்களோ அவனே உண்மையாக வாழ்கின்றவன் என்பது சமஸ்கிருதப் பழமொழியாகும். பயனுள்ள வாழ்க்கையே பயனுள்ளதாகும்.

### மற்றவர்களுக்கு மகிழ்ச்சியளிப்போம்

இவவுலகில் வாழ்கின்ற ஒவ்வொருவரும் வருவாயை இலக்காகக் கொண்டே வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்கின்றார்கள். ஒவ்வொருவரும் மற்றவர் வாழ்க்கையில் மகிழ்ச்சியைக் கொடுக்கின்றவர்களாக இருக்கின்ற போதே தாமும் நிறைவடைகின்றார். துன்பங்கள் நமமை நெருங்குகின்றபோது தான் இறைவனின் கரத்தை நாம் அதிகமாக எதிர்பார்கின்றோம். ஒவ்வொரு உதயமும் விணணகத்தை நினைவுபடுத்திக கொண்டு இருக்கின்றது. இயேசுவுக்கும் சோதனைகள வந்தன. ஆனால் அவர் அவற்றிலிருந்து பின்வாங்கி விடவில்லை. துணிவோடு அவற்றை வெற்றி கொணடார். எனவே இயேசு எமக்கு தம் வாழ்க்கையினால் முன் மாதிரியாக வாழ்ந்து காட்டியுள்ளார். அவரின அடிச் சுவட்டை பின்செல்லும் நாமும் அவரின் வழி தொடர வேண்டும்.

### தளரா விசுவாசத்தை வளர்ப்போம்

இறைவன் தாவீதை இஸ்ராயேலின் பாதுகாவலனாக ஆட்சி செய்ய பணித்தார். அவருக்குப் பக்கபலமாக இருந்தார்.

தீமைகள இடர்களில் நின்று

**அன்ரனி பீற்றர்**

இறைவன தாவீதைக் காத்தார். எனவே தாவீது தனது பாரத்தையெல்லாம் ஆண்டவருக்கு ஒப்படைத்தான் ஆணடவர் தாமே தாவீதை ஆசீர்வாதங்களால நிரப் பினார். தாவீதின் ஆட்சி ஓங்கச் செய் தார். எனவே நாமும் எவ்வகைச் சோத னைகள் துன்பத்திலும் தளராத விசுவாசத்துடன் இறைவனை நம்பி வாழ்வோம் அவரின் ஆசீர்வாதஙகளைப் பெற்றுக் கொள்வோம். □

## புதிய மாணவர்கள் சேர்ப்பு

(கொழும்பு)

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின புதிய கல்வியாண்டிற்கு வெளிவாரி மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பலகலைக்கழக உபவேந்தர் தெரிவித்துள்ளார்.

கலைமாணி, வணிகமாணி, வர்த்தக நிர்வாகமாணி ஆகிய 3 பாடநெறிகளுக்கென வெளிவாரி மாணவர்கள் பதிவுசெய்யப்படவுள்ளனர்.

தமிழ் மற்றும் ஆங்கிலமொழிகளில் இதற்கான பரீட்சைகள் நடைபெறும். கல்வி பொது தராதர உயர்தரப் பரீட்சையில் அங்கீகரிக்கப்பட்ட 3 பாடநெறிகளில் ஒரே தடவையில் சாதாரண தரத்தை பெற்றவர்கள் பதிவுசெய்யலாமென பல்கலைககழகத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

இம் மாதம் 12ஆம் திகதி தொடக்கம் ஜனவரிமாதம் 11ஆம் திகதி வரை விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்ப டும்.

பூர்த்தி செய்யபபட்ட விண்ணப்படிவங்களை ஜனவரி மாதம் 20ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படவுள்ளன. (த-7)

## உலகில் மிகப்பெரிய மிதக்கும் புத்தக ஏல விற்பனை நிலையம்

### கொழும்பு துறைமுகத்தில்!

(கொழும்பு)

உலகில் மிகப்பெரிய மிதக்கும புத்தக ஏலவிற்பனை நிலையத்தில் நூலகளைக் கொள்வனவு செய்யும் வாய்ப்பு இலங்கை மக்களுக்குக் கிடைத்துள்ளது.

இந்த மிதக்கும் நூல் நிலையம் தற்போது கொழும்பு துறைமுகத்தில் உள்ளது.

இந்தக கப்பலில் உலகில் பிரசித்திபெற்ற 6ஆயிரத்திற்கும் மேற்பட்ட நூல்கள் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளன.

அமெரிக்காவில் 'S.S மெதினா' எனும் பெயரில் தயாரிக்கப்பட்ட இக் கப்பல் 1977ஆம் ஆண்டின் பின்னர் 'வூளோஸ்' எனப் பெயர் மாற்றம செய்யப்பட்டு பிரசித்திபெற்றது.

இக் கப்பலின் நீளம் 130 மீற்றர்களாகும். இதில் 320 பேர் கடமையாற்றுகின்றனர்.

நூல்களின் ஏலவிற்பனை எதிர்வரும் 31ஆம்திகதி வரை இடம் பெறும். (ற-8)

# இராசி பலன்

18.12.2005
(மார்கழி 03, சனிக்கிழமை)
திருதியை பின்னிரவு 1.38மணிவரை
புனர்பூசம் பிற்பகல் 2.44 மணிவரை
இராகுகாலம் 4.53-6.23 மணிவரை
சுபநேரம் 9.23-10.53 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | மாதர் நட்பு, காரியதாமதம், பொருள் விரயம், குடும்பக் கவலை. |
| இடபம் | பெரியோர் ஆசி, நல்ல முயற்சி, ஆழ்ந்த சிந்தை, சயன சுகம். |
| மிதுனம் | பிதாசிந்தை, உணர்ச்சி வசப்படுதல், சுப செலவு, காரியதாமதம். |
| கடகம் | தொழில் சிந்தை, பெருமையடைதல், மனமகிழ்ச்சி, தெய்வதரிசனம். |
| சிங்கம் | சுபநிகழ்வு, கடினமுயற்சி, பிறர் உதவி, தெய்வதரிசனம். |
| கன்னி | ஆன்றோர் மதிப்பு, உடல் உழைப்பு, புதிய திட்டமிடல், வீண்பயம். |
| துலாம் | வாகன பயம், போசன சுகம், அமைதிக் குறைவு, காரியதடங்கல். |
| விருச்சிகம் | திடீர் பயணம், அபூர்வ சந்திப்பு, கௌரவமான நிலை, காரிய அனுகூலம். |
| தனுசு | சுகவாழ்வு, பணவருவாய், திடீர்பயணம், தெய்வசிந்தை. |
| மகரம் | வியாபார நன்மை, காரிய இடையூறு, கௌரவக்குறைவு, பண விரயம். |
| கும்பம் | பயந்தசுபாவம், அற்பர் உறவு, கல்வியில் ஆர்வம், சுப செலவு. |
| மீனம் | இனிய அனுபவம், அன்னியர் சந்திப்பு, வாக்கு மேன்மை, தெய்வதரிசனம். |

பழைய ...ரப்படி கணிப்பிடப்பட்டது.
- வளவன்

## சிறையிலிருந்த எனக்கு — ஆஸி. கைகொடுக்கவில்லை

### சாள்ஸ் ஞானக்கோன் விசனம்

(கொழும்பு)

அவுஸ்திரேலிய பிரஜையாகிய தன்னை இலங்கை அரசு 55 நாட்கள் சிறைக்கைதியாக வைத்திருநத வேளை அவுஸ்திரேலியா தனக்கு கைகொடுக்கவல்லை என்று சாள்ஸ் ஞானக்கோன் தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் படுகொலையுடன் சம்பந்தப்படுத்தி இலங்கை அரசு தன்னை ஒரு அரசியல் கைதியாக வைத்திருந்த போது அவுஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் அலெக்ஸாணடர் டவுணிங் மற்றும் அதிகாரிகள் பாராமுகமாக இருந்தனர் என்றும் தனது முறையீடுகளுக்கு செவி சாய்க்காது விட்டிருந்தனர் என்றும் ஞானக்கோன் விசனம் தெரிவித்துள்ளார்.

தன்னை ஒக்டோபர் 10ஆம்திகதி கைதுசெய்த இராணுவத்தினர் பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைத்திருநதபோது உடல் ரீதியான தாக்குதல்கள் நடத்தப்படவில்லையாயினும் உளரீதியாகத்தான் சித்திரவதைக்குட்படுத்தப்பட்டதாகவும்,

தனது நெருங்கிய நண்பராகவிருந்த கதிர்காமரை கொலைசெய்தவர் களுடன் தனக்கு எந்தவித தொடர்புகளும் இருந்திருக கவில்லையென்றும் அவர் தெரிவித்துள்ளார். தனது பணத்தில் ஒரு மில்லியன் ரூபாவை செலவிட்டு அம்பாந்தோட்டையில் தான் இலவச மருத்துவ சேவைகளை நடத்தியதாகவும் ஜாதிக ஹெல உறுமய எம்.பிக்களின் அனுசரணையுடன் எம்பிலி பிட்டியவில் பௌத்த விகாரைகளில் மருத்துவ கிளினிக்குகளை நடத்தியதாகவும் மஹிந்தராஜ பக்ஷவின் 'ஹெல்ப்பிங் அம்பாந்தோட்டை திட்டத்தினூடாக 150 மில்லியன் ரூபா பெறுமதியான சுனாமி வீடமைப்பு திட்டத்தை மேற்கொள்வதற்கு நிலம் பெற்றுக் கொண்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-6)

## மன்னாரிலும் சோதனை அதிகரிப்பு

(மன்னார்)

மன்னார் பேசாலைப் பகுதியில் கடந்த திங்கட் கிழமை இடம்பெற்ற குண்டுத் தாக்குதலுக்குப் பின்னர் அப்பகுதியில் திடீர் சோதனைகளும் சுற்றிவளைப்புகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பேசாலைப பகுதியில் படையினர் ஊர்திகளை மறித்து மக்களை இறக்கி அடையாள அட்டைச் சோதனை நடவடிக் கையினை மேற்கொண்டனர்.

இதேசமயம், மன்னாரிலுள்ள அனைத்து காவல் அரணகளும் பலப்படுத்தப்பட்டுள்ளதால் அப்பகுதி மக்கள் அச்சத்திற்குள்ளாகியுள்ளனர்.

இதுதவிர மன்னார் நகரத்திலும் இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் அதிகமான அளவு குவிக்கப்பட்டு சோதனை நடவடிக்கைகளும் இடம்பெற்று வருகின்றன. (ற)

## தரம்-1 ஆசிரிய சேவையினருக்கு தீர்வையற்ற வாகனங்கள்

(கொழும்பு)

தரம் 1ஆசிரிய சேவையில் உள்ளவர்களுக்கு தீர்வையற்ற முறையில வாகனங்களை பெற்றுக் கொடுப்பதற்கு கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த இணக்கம் தெரிவித்துள்ளார்.

கல்விசார் ஊழியர் சங்கத்திற்கும் அமைச்சருக்கும் இடையில் கடந்த சந்திப்பு ஒன்றிலேயே இவ்விணக்கம காணப்பட்டுள்ளது.

மேலும் இசசந்திப்பின் போது ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினை, இடமாற்றம் தொடர்பான விடயங்கள் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன.

கல்வியியற் கல்லூரிகளில் பயிலும் ஆசிரியர்களின் சம்பள நிலுவைகளை கல்வி பயிலும் காலத் திலேயே பெற்றுக்கொடுக்க வேண்டும் என்றும கோரிக்கை விடுக்கப்பட்டது. அவற்றிற்கும் அமைச்சரினால் இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

கல்விசார் ஊழியர் சங்கத்தின் சார்பாக பொதுச் செயலர் வசந்த தர்மசிறி, பொருளாளர் டபிள்யூ.பி.தயாரத்ன ஆகியோர் இச் சந்திப்பில் கலந்துகொண் டனர். (ற-2)

## மனித எலும்புக்கூடுகள் புத்தளத்தில் மீட்பு

(புத்தளம்)

புத்தளம் நகரிலிருந்து-கொழும்பு வீதியில் 500 மீற்றர் தொலைவில் காணப்படும் இலங்கை மின்சாரசபையின் காரியாலயத்திற்கு அருகில் மனித எலும்புககூடுகளை புத்தளம் பொலிஸார் மீட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து அங்கு சென்ற பொலிஸார், மண்டையோடு மற்றும் எலும்புக்கூடுகளை கண்டெடுத்ததுடன், இதனுடன் காணப்பட்ட வெள்ளைச்சாரம் ஒன்றையும் எடுத்துள்ளனர்.

இந்த எலும்புக்கூடுகள் எவ்வாறு இங்கு வந்தது என புத்தளம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். 2மாதங்களுக்கு முன்பு புதைக்கப்பட்ட பிரேதம் ஒன்றின் எலும்புக்கூடாக இது இருக்கும் என சந்தேகிக்கும் பொலிஸார் இதுகுறித்து துரித விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஸ்தலத்திற்கு சென்ற புத்தளம் பதில் நீதவான் ஏ.எம்.எஸ்.அப்துல் காதர், எலும்புக்கூடுகளை இரசாயன பகுப்பாய்வுக்கு உட்படுத்துமாறு புத்தளம் பொலிஸாருக்கு பணிப்புரை விடுத்துள்ளார். (ற-15)

மற்றவர்கள் செய்யமுடியாததை செய்துமுடிக்கக் கூடிய ஆற்றலை ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் பெற்றிருக்கிறார்கள்.

- பெர்னார்ட்ஷா

வலம்புரி

# இறுதியும் உறுதியுமான பேச்சு நோர்வேயின் கையில்

நோர்வேயின் சமாதான முயற்சிகளை ஜனாதிபதி மகிந்தவும் அவரோடு இணைந்து நிற்கும் ஜே.வி.பியும் உள்ளார்ந்தமாக விரும்பவில்லை என்பது வெளிப்படையான உண்மை.

நோர்வேயை எதிர்த்து பல்வேறு போராட்டங்களை ஜே.வி.பி. முன்னெடுத்திருந்தாலும் இலங்கையின் சமாதான முயற்சியில் நோர்வேயை விட்டால் வேறெந்த நாடும் அந்த முயற்சியைத் தொடர்வதற்கில்லை என்ற உண்மையையும் மறுப்பதற்கில்லை.

யாழ்ப்பாணத்தில் தாக்குதல்கள் நடந்துவிட்டால் உடனடியாக உதவிக்கரம் நீட்டுமாறு நோர்வேயிடம் இலங்கை அரசு வேண்டிநிற்கும் பரிதாபம், இப்படியும் ஆட்சியாளர்கள் இருக்கிறார்கள் என்பதற்கு நல்லதோர் உதாரணமாகும்.

நோர்வேயின் உதவியையைப் பெற்றுவிட்டு பின்னர் அந்த நாட்டின் உதவியை மறந்து போய் தூக்கியெறியும் இலங்கை ஆட்சியாளர்களின் நரித்தனம் நோர்வேக்கு நன்கு தெரியும்.

இதன் காரணமாகவே அரசுக்கும் – விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை மீண்டும் முன்னெடுப்பதற்கு நோர்வே நிபந்தனை விதித்துள்ளது.

நோர்வேயின் அனுசரணை தேவையில்லை என்று கோஷம் எழுப்பியவர்கள் – ரணில் விக்கிரமசிங்க நோர்வேக்கு அடிமைப்பட்டு விட்டாரென பிரசாரம் செய்தவர்கள் இப்போது நோர்வேயின் காலில் விழாக்குறையாகக் கெஞ்சுகிறார்கள்.

நோர்வே விதித்த நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டாலும், விழுந்தும் மீசையில் மண் மூட்டவில்லை என்பதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாவனைகள் அமைந்துள்ளன.

பரவாயில்லை வாய்ச்சொல்லில் வீறாப்பாகப் பேசினாலும் அலுவல் நடந்தாகட்டுமே என்று விட்டுவிடலாம். ஆனால் இலங்கையின் ஆட்சித் தலைமைகளின் ஏமாற்றுகளுக்கு நோர்வே ஆளாகிவிடக்கூடாது என்பதே மக்களின் விருப்பமாகும்.

சமாதானப் பேச்சுக்களை ஆசிய நாடொன்றில் நடத்தவேண்டுமென்பது மகிந்த ராஜபக்ஷவின் முடிபு. ஆசிய நாடொன்றில் பேச்சுவார்த்தையை நடத்துவது என்பதைப் பொருள்பட சுருக்கமாகவும், விளக்கமாகவும் கூறுவதாயின் அது இந்தியாவில் பேச்சுக்களை நடத்துவது என்பதாகவே இருக்கும்.

இந்தியாவில் பேச்சுக்களை நடத்துவதன் மூலம் நோர்வேயின் சமாதான முயற்சிக்கு ஆப்பு வைப்பதும், இந்தியாவின் உதவியைப் பெற்று விடுதலைப் புலிகளுக்கு அழுத்தம் கொடுப்பதுமாகிய இரு முக்கிய விடயங்கள் அதில் உள்ளடங்கியுள்ளன.

இதில் நோர்வே எவ்வளவிற்கு உறுதியாக இருக்கின்றது என்பதனைப் பொறுத்தே இலங்கை ஆட்சித் தலைமைகளின் ஏமாற்றல்கள் இருக்கப்போகிறது.

# இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண இரு கட்சிகளும் இணைய வேண்டும்

## தமிழ்க் கூட்டமைப்பு வலியுறுத்து

(கொழும்பு)

இரண்டு முதன்மைக் கட்சிகளும் இணைந்து இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முன்வரவேண்டும் என்பதனையே நாம் அன்றுதொட்டு வலியுறுத்தி வருகின்றோம். எனவே இந்த இறுதிச் சந்தர்ப்பத்திலாவது ஜே.வி.பி,ஹெல உறுமய போன்ற இனவாதக்கட்சிகளை ஓரங்கட்டிவிட்டு தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க அவர்களின் அபிலாஷையினை நிறைவேற்றக்கூடிய தீர்வினைக்காண இரண்டு முதன்மைக்கட்சிகளும் முன்வரவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆகிய இரண்டு கட்சிகளும் ஒன்றிணையாது தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது என்பது கடினமாகும் எனவும தமிழத் தேசியக் கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

சமாதான முயற்சிகள் தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரச பிரதிநிதிகளும் எதிர்க்கடசித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி பிரமுகர்களும் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டிருந்தனர். இச்சந்திப்பு தொடர்பாக்க் கருத்து வெளியிட்ட போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

இரண்டு முதன்மைக்கட்சிகளும் இணைந்தே இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்று அன்று தொடக்கம நாம் சுட்டிக்காட்டிக்கொண்டே வருகின்றோம். இரண்டும் வெவ்வேறு நிலைகளில் இருந்து இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது என்பது ஒருபோதும் முடியாத செயலாகும்.எனவே,தற்போதாவது இரண்டு முதன்மைக் கட்சிகளும் ஒன்றிணைந்து தமிழர்களுடைய அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையிலான தீர்வினைக்கொண்டு வரவேண்டும எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ற)

# மஹிந்தவின் வரவு -செலவுத் திட்டம் முதலாளித்துவ குணாம்சத்தின் சிந்தனை

## -விக்கிரமபாகு கருணாரட்ண சாடல்

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராபக்ஷவினது வரவு-செலவுத் திட்டமும், சிந்தனையும் முதலாளித்துவ குணாம்சத்தின் சிந்தனையே என்று புதிய இடது முன்னணி விக்கிரமபாகு கருணாரட்ண சாடியுள்ளார்.

மஹிந்தவின் வரவு-செலவுத்திட்டம் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏழைகளுக்கு வ்ழங்கப் போவதாகக் கூறிவந்த எதுவும் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் இடம்பெறவில்லை. யாவும் மறக்கப்பட்ட நிலையே தற்போது தென்படுகின்றது.

மக்களுக்காக எனப் பிரசாரம் செய்யப்பட்டாலும் வரவு-செலவுதிட்டத்தின் பின்புலத்தில் உலக மய சுரண்டலாளர்கள் தெளிவாகத் தெரிகின்றனர். தனது உரையில் உட் கட்டுமானப்பணியின் தேசிய மட்டத்திலும் கிராமிய மடடத்திலும் நவீனப்படுத்தி உற்பத்தி வேகததை அதிகரிப்பதுடன்,வெளிநாட்டிற்கும் ஏற்றவகையில் வேலை வாய்ப்பிற்கான திறமையை வளர்க்கப் போவதாகத் தெரிவித்திருந்தார். மேலும் தனியார்துறை, மக்கள் துறை, அரச சார்பறற துறை என்பவற்றின் ஊடாக இந்த பொருளாதார இலக்கை அடையப்போவதாகவும் கூறியிருக்கிறார்.

மஹிந்தவின் பொருளாதார ஆலோசகர் அஜித் கப்ரலி அதற்கான பணத்தை அரசாங்கம் எங்கே இருந்து பெறப் போகிறது என கேட்கப்பட்ட போது எம்மால் நடைமுறைப் படுததப்படவிருக்கும் இந்த பாரிய அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் அந்த இலக்கை அடைவோம் எனக் கூறினார்.

மேலும்,நாங்கள் பன்னிரண்டு பொருளாதார வலயங்களை உருவாக்கவுள்ளோம்.300 புதிய கைத்தொழில் சாலைகளை அமைக்கவுள்ளோம். மின் உற்பத்தி நிலையங்கள் ,பாரிய பாதைகள், புதிய விமான நிலையம் என்பவற்றின் மூலம் மிகப் பெரியதொரு பொருளாதார இலக்கை அடைய இருக்கிறோம். இந்த நாட்டில் வரலாற்றின் இப்படியான பாரிய அபிவிருத்தித்திட்டம் முன்வைக்கப்படவில்லை எனவும் கூறியிருக்கிறார்.

இப்படியான பெரிய எதிர்பார்ப்புகள், பேச்சுக்கள் என்பன ஜே.ஆர்.ஜெயவர்த்தன பதவிக்கு வந்தபோதும் கூறப்பட்டது.

அதாவது துரித மகாவலி அபிவிருத்தித்திட்டம், சுதந்திர வர்த்தக வலயம் என்பவற்றின் ஊடாக பத்துவீத பொருளாதார வளர்ச்சி கிடைக்கும் என எதிர்பார்க்கப் பட்டது. தற்போது பெருமளவு பண முதலைகள் 1970 பிற்பகுதியில் நடந்ததைப் போல மிக எதிர்பார்ப்புடன் உட் கட்டமைப்பிற்காக அதிக மூலதனங்களை எதிர்பார்த்துக் காத்துக் கிடக்கின்றனர்.

உண்மையில் பேச்சுப் பல்லக்கு தம்பி கால்நடை என்பது போல் ஏழைகள் பற்றி அதிகம் கதைப்பது. ஆனால் ஒன்றுமே செய்யாது வருவதற்கு முதலாளித்துவத்தின் குணாம்சமாகும். இதுவே மஹிந்த சிந்தனையுமாகும் என்றுள்ளது. (த-7)

# ஓய்வூதிய அதிகரிப்பு ஜனவரி முதல் அமுலுக்கு

(கொழும்பு)

வரவு-செலவுத்திட்டத்தில் ஓய்வூதியக்காரர்களுக்கு அறிவிக்கப்பட்ட 500ரூபா அதிகரிப்பு ஜனவரி மாத சம்பளத்துடன் வழங்கப்படும் என்று ஓய்வூதியத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இத்துடன் அடிப்படைச்சம்பளத்துடன் 1250 ரூபா படியைச் சேர்ப்பதன் மூலமாக பத்துசதவீத சம்பள அதிகரிப்பை வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியப்பணிப்பாளர் கே.ஜெ.திலகரட்ண இது குறித்து கூறுகையில், இந்தப்படி 1000ரூபாவில் இருந்து ஆகக்கூடுதலான 1250 ரூபாவரை மட்டுப்படுத்தப்படும் என்று கூறினார்.

500ரூபா வாழ்க்கைச் செலவின் படி 6மதங்களுக்கு ஒரு தடவை மீளாய்வும் செய்யப்படும். இதன் கீழ் ஒவ்வொரு மேலதிக வாழ்க்கைச்செலவு சுட்டெண்ணிற்கும் 2ரூபா 50 சதம்படியாக வழங்கப்படும். பிரதேச செயலகங்களில் ஓயவூதிய விபரங்கள் கணனி மயப்படுத்தப்பட்டு வருகின்றது. என்று பணிப்பாளர் மேலும் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் வரவு-செலவுத்திட்டம் நிறைவேற்றப் பட்டதும் உத்தேசக் கொடுப்பனவை வழங்குவதற்கான அதிகாரங்கள் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு வழங்கப் படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-7)

# தினக்குரல், சுடர்ஒளி பத்திரிகைகள் எரிப்பு

(கொழும்பு)

நேற்று நண்பகல் அக்கரைப்பற்று பள்ளிவாசலுக்கு அருகில், விற்பனைக்கு வந்த சுடர்ஒளி, தினக்குரல் பத்திரிகைகள் குழு ஒன்றினால் வீதியில் வைத்து எரிக்கப்பட்டுள்ளது.

கடநத சில நாட்களுக்கு முன்னர் கருணா குழுவில் இருந்து தமிழீழ விடுதலைப்புலிகளிடம் சரணடைந்தவர்கள கருணா குழுவினருடன் அத்தாவுல்லாவின் தொடர்பினையும், அத்தாவுல்லாவின் ஆதரவுடனேயே பள்ளிவாசல் குண்டு வீச்சுச சம்பவம் இடம்பெற்றது எனவும் தெரிவித்திருந்த செய்திகளை பத்திரிகைகளில் பிரசுரம் செய்தமையினால தங்கள் மிலேச்சத்தனங்கள் மக்களுக்கு தெரிய வந்துள்ள ஆத்திரத்திலேயே இந்த இரண்டு பத்திரிகைகளையும் அத்தாவுல்லா குழுவினர் தீ வைத்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது. (அ)

# மாணவர்கள் சிரமம்

(தனங்கிளப்பு)

தென்மராட்சிப் பகுதியில் இயங்கும் தனியார்கல்வி நிறுவனங்களின் மாணவர்கள் தமது சுயவிருப்பத்தின் கீழ் கல்வி கற்கமுடியாத நிலை காணப்படுவதாக மாணவர் சமூகம் தெரிவிததுள்ளது.

உயர்தர மாணவர்கள் ஒரே இடத்திலேயே மூன்று பாடங்களையும் கற்கவேண்டிய நிலையில் இருப்பதால் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையை சீர்செய்வதற் குரிய நடவடிக்கையினை சம்பந்தப்பட்டவர்கள் மேற்கொண்டுதமது கல்விச் செயற்பாட்டினை ஊக்குவிக்க வேண்டுமெனவும் தெரிவிக்கின்றனர். (த-7)

## தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



மரத்தின் வேருக்கு நீர் ஊற்று. அது முழு மரத்திற்கும் நீர் பாய்ச்சியதற்கும் ஒப்பாகும். இறைவனை முதலில் பற்றிக்கொள். அதன்மூலம் அனைத்தையும் நீபெறுவாய். உனக்கு ஏதாவது தங்கு நேருமாயின் இறைவன் உன்னுடன் வளையாடுகிறான் என நினைத்து மட்டற்ற மகிழ்ச்சியுடன் இரு.

சுவாமி விவேகானந்தர்

### மடத்துவெளி...

அருகில் இருக்கும்கிணற்றில் இருந்து நேற்று மாலை சடலமாகக் கண்டு பிடிக்கப்பட்டது. இது குறித்து ஊர்காவல் துறைப் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டது. (ச-126)

### ஹெலி மீது நடத்தப்பட்ட...

வேளை இச்சம்பவம் தொடர்பாக தம் மீது சுமத்தப்பட்ட குற்றச் சாட்டை விடுதலைப்புலிகள் மறுத்துள்ளனர். திட்டமிட்டு தம் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு என தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கிளிநொச்சியில் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார். இச் சம்பவம் தொடர்பாக நோர்வே தூதரகத்துக்கும் கண்காணிப்புக் குழுவிற்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-4)

### வெட்டுப்புள்ளி...

வெட்டுப் புள்ளி விபரங்கள் வெளியிடப்படுவது தாமதமாக விருந்தாகவும் மேலும் தெரிவித்தார். (ச-8)


## ரிச் கேக் / RICH CAKE



RECIPE FOR RICH CAKE
RECENT ARRIVAL OF QUALITY FRESH CAKE INGREDIENTS ALL AT VERY COMPETITIVE PRICE

### 175 ரிச்கேக் தயாரிக்க தேவையான மூலப்பொருட்கள்

| | |
|---|---|
| 500 கிராம் ரவை | 1 போ.கோல்டன் சிரப் |
| 500 கிராம் பட்டர் | 200 கிராம் கென்டீட் பீல் |
| 500 கிராம் ஸுல்டனாஸ் | 1 வெனிலா எசன்ஸ் |
| 500 கிராம் ரெய்சின்ஸ் | 1 ஆமன்ட் எசன்ஸ் |
| 500 கிராம் செரீஸ் | 1/2 றோஸ் எசன்ஸ் |
| 500 கிராம் பம்கின் பிரசர்வ் | 1 வைன் கிளாஸ் தேன் |
| 600 கிராம் கஜு | 2 வைன் கிளாஸ் பிரண்டி |
| 200 கிராம் கறன்ஸ் | 1/4 தேக்கரண்டி உப்பு |
| 500 கிராம் சவ் சவ் | 27 முட்டை |
| 500 கிராம் ஜின்ஜர் பிரசர்வ் | (27 மஞ்சள் கரு |
| 1 போ.ஸ்ரோபரி ஜேம் | 14 வெள்ளை கரு) |
| 600 கிராம் சொவ்ட் சுகர் | 1/4 தேக்கரண்டி சாதிக்காய் |

செய்முறை:
முட்டை, சீனி, வறுத்த ரவை, பட்டர் முதலியவற்றை தவிர மற்ற பொருட்களை சிறுதுண்டுகளாக வெட்டி 5 நாட்களுக்கு வைக்கவும்.
வெள்ளைக்கருவை சீனியில் சேர்த்து நன்றாக அடித்து வறுத்து ரவையைசேர்க்கவும். அத்துடன் மஞ்சள் கரு.பட்டர். வெட்டிய பொருட்களுடன் சிறிதளவு பேக்கிங் பவுடரையும் சேர்க்கவும். பிறகு கேக் டிரேயில் பேறுட பேக் செய்யவும்.

**பெட்டா எசன்ஸ் சப்பிளையர்ஸ்**
104(298), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
தொ.பேசி/பெக்ஸ்:021 222 2386

### INGREDIENTS FOR 175 PIECES RICH CAKE

| | |
|---|---|
| 500 grms Semolina | 200 grms Candid Peel |
| 500 grms Butter | 1 OZ.Vanilla Essence |
| 500 grms Sultanas | 1 OZ.Almond Essence |
| 500 grms Raisins | 1/2 OZ.Rose Essence |
| 500 grms Cherries | 1 Wine Glass Bees Hony |
| 500 grms Pumpkin Preserve | 2 Wine Glass Brandy |
| 600 grms Cadju Nuts | Rind from a Lime |
| 200 grms Currants | 1/4 Tea Spoon Salt |
| 500 grms Chow Chow | 1 Tab Spoon Spices |
| 500 grms Ginger Preserve | 27 Eggs |
| 1Bottle Strawbery Jam | (27 Yolks - 14 white) |
| 600 grms So ft Sugar | 1/4 Tea Spoon net meg |
| 1Bottle Golden Syrup | |

METHOD
Chop all the ingredients and mix all the fruits together with the Spices, Golden Syrup,Brandy and Essences and set aside for 5 days.
Beat the White Yolk With Sugar add Roasted Semolina With Butter. Then mix Yellow Yolk and the Chopped Fruits (Add little baking powder) pour the mixture on a cake tray and bake.

**PETTAH ESSENCE SUPPLIERS**
104 (298) Hospital Road,Jaffna
Tel/Fax :021 222 2386
(C.075)


## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை கணேசன்



(துன்னாலை மத்தி. கரவெட்டி)

கோயிற்கடவை துன்னாலை மத்தி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட *கணபதிப்பிள்ளை கணேசன்* அவர்கள் 16.12.2005 வெள்ளிக்கிழமை இரவு இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப் பிள்ளை சின்னம்மா ஆகியோரின் அன்பு மகனும், காலஞ் சென்ற வல்லிபுரம் தெய்வானை ஆகியோரின் அன்பு மருமகனும், மகேஸ்வரியின் அன்புக்கணவரும் மகேசன் (இளைப்பாறிய கல்வி அதிகாரி), செல்வவிநாயகம் ,குணவதி (இளைப்பாறிய ஆசிரியை) ,குகவதி ,விமலை ,கதிரவேலு (ஆசிரியர் வசாவிளான் ம.ம.வி) , கமலாதேவி (ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதர ரும் சைவசி காமணி (எழுதுவினைஞர் ), சைவஇறைமணி (ஆசிரியர்) காலஞ்சென்ற சைவகலைஞன் மற்றும் சிவகுமாரன் (தாதியர் உத்தியோகத்தர்) , திருமாலழகன் (ஆசிரியர் உரும்பிராய் இந்துக் கல்லூரி– வலம்புரி நாளிதழ் இயக்குநர்சபை) , யசோதை (தாதியர் உத்தியோகத்தர்) ,வியாசர்மணி ,வனிதா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ,

ஞானாமிர்தம் (ஆசிரியை) , அனுசபவானி (தாதிய உத்தியோகத்தர்) , கௌசல்யா, சந்திரமௌலீஸ்வரன் (தாதியர் உத்தியோகத்தர்) சுகந்தி , குகனேசன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் சுபவாசினி ,சுபாங்கி ,திசாந்தன் , சங்கவிதா , பிரணவன் , சாரங்கன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 18.12.2005 ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியளவில் அன்னாரின் துன்னாலை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக துன்னாலை வேருண்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் ,உறவினர் , நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*கோயிற்கடவை*
*துன்னாலை மத்தி, கரவெட்டி.* (இ-005)

தகவல் ,
**க. சிவகுமாரன் (மகன்)**


நிறைஞ்சனாஸ் சங்கானை
சரத்குமார், தேவயானி நடித்த
மூவேந்தர்
கா.நே: 11.00, 2.45, 3.00 (பு.நே)

மனோகரா யாழ்.
DIGITAL dts SOUND ஒலிநயத்துடன்
இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரே தின வெளியீடாக
சூர்யா, திரிஷா, வடிவேல் நடித்த
ஆறு
காட்சி நேரம்: 10.30, 1.30, 4.30
7.30, 10.30 (பு.நே)

ராஜன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்
காட்சி நேர மாற்றம்:
10.30.2.00.5.15.8.15 பு.நே
ஷாம், சினேகா, வடிவேல் நடித்த
ஏ பி சி டி 10.30,2.00
Super Star Hero Tom Cruise in
WAR of the World
(English) 5.15,8.15

## பெட்டா எசன்ஸ் சப்ளையர்ஸ்

அச்சகப் பேப்பர் வகைகள்,அதற்குரிய மை வகைகள், ஓவ்செற் வேலைகளுக்கு பாவிக்கும் கெமிக்கல்வகைகள், பிறஸ்டல் போட் வகைகள், பொக்ஸ் போட், சிப்போட், பைல் வகைகள், திருமணஅழைப்பிதழ்கள் ,கேக் பொக்ஸ் (திருமணம்) மற்றும் ஸ்ரேசனறிஸ், கணனி காகிதாதிவகைகள் ,றிபன் , புளொப்பி டிஸ்க் வகைகள் என்பவற்றை தரமாகவும் நியாயமான விலையிலும் பெற்றுக்கொள்ள யாழ்.நகரில் முதன்மை ஸ்தாபனம்

**பெட்டா எசன்ஸ் சப்ளையர்ஸ்**
**104 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
**T.P-021 222 2386**

குறிப்பு:
பெட்டா எசன்ஸ் அன்ட் பேப்பர் மேர்ச்சன்ட் இரண்டும் No: 104 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் மட்டும் இயங்குகின்றது என்பதை எங்கள் அன்பர்கள், ஆதரவாளர்கள்,வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம்.
எனவே பேப்பர் மேர்ச்சன்ட் தொடர்புகள் அனைத்தையும் பெட்டா எசன்ஸ் சப்ளையர்ஸில் மட்டுமே வைத்துக்கொள்ளவும்.
C-அ-076

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 077-2349999,
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com,reservations@expoavi.com.
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...



எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.12.2005 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.